183

ஜகன்மோகினி

ஆசிரியை

வை. மு. கோதைநாயகி அம்மாள்

183

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 - APR 1957
MADRAS

டாக்கி நாவல்?

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய

அநாதைப் பெண்

அல்லது

கனிந்த காதலர்

1819

விரைவில் வெளிவரும்

ஆவலுடன் எதிர்பாருங்கள்

JC
ஐ211,N22.5M
N36.13.8.
182991

"ஜகன்மோகினி" ஆபீஸ்
2௦, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை

மலர் 13
இதழ் 8

ஏஜண்டுகள் தேவை

ஜகன்மோகினி

ஆசிரியை : வை. மு. கோதைநாயகி அம்மாள்.

13-வது ஆண்டு ஆரம்பம்	**மாதாந்த** **நாவல்** **சஞ்சிகை.**	ஜனவரி 1936

ஆங்கில மாதம் முதல் தேதியன்று வெளி வரும்.
எல்லா பத்திரிகை விற்போரிடமும் கிடைக்கும்.

வருஷ சந்தா ரூ. 1-8	**ஜீவிய சந்தா** **ரூ. 25**	தனிப்பிரதி அணா 2

ஜீவிய சந்தா நேயர்களுக்கு இனாம்.

: இனிமேல் நமது நூலாசிரியையால் எழுதப்பட்டு, நம்மால் பிரசுரிக்கப் படும் எல்லா நாவல்களும் இனாமாக அளிக்கப்படும்.

பங்கு 1 நளினசேகரன் வீரவஸந்தா 3 வைரங்கள் படாடோபத்தின் பரிபவம் பிச்சைக்காரக் குடும்பம்	இனாமாக நாவல்கள் வேண்டுமா ?	பங்கு 2 பரிமளகேசவன் உத்தமசீலன் கதம்பமாலை சுகந்தபுஷ்பம் கோபாலரத்னம் புத்தியே புதையல்
பங்கு 3 கௌரீமுகுந்தன் ஸாரமதி சோதனையின் கொடுமை	எத்தனை புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து முன்பணம் அனுப்புகிறீர்களோ, அத்தனைவது நம்பர் பங்கிலுள்ள புத்தகங்களில்	பங்கு 4 தியாகக்கொடி நவநீதகிருஷ்ணன் சாமளநாதன் ருக்மிணீகாந்தன் மங்களபாரதி
பங்கு 5 வைதேகி பத்மசுந்தரன் ராதாமணி காதலின் கனி சாருலோசனா	ஒன்று இனாம்	மூன்று புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து முன் பணம் அனுப்புவோருக்கு ஒரு வருஷ சஞ்சிகை இனாம்.

"ஜகன்மோகினி ஆபீஸ்" திருவல்லிக்கேணி.

8- APR 1937

11-வது அதிகாரம்

ப்ரேமைக் கயிற்றில் பிணைப்பட்ட மான்கள்

உலகத்தில் மக்களாய்ப் பிறந்த எல்லா உயிர்களுக்கும் அவரவர்களுக்கு ஏற்றது போலான உணர்ச்சிகளும், இன்ப துன்பங்களும் சதா சாகர அலைகள்போல மாறி மாறி மோதிக்கொண்டே இருப்பது இயல்பும் கண்கூடானவையும் ஆகும்.

சதா கலகம் செய்துப் பிறருக்குக் கேடுதேடுவதையே நினைவாகக் கொண்ட நாகலிங்கத்தின் மனத்திற்குத் தான் அமைதியும் நிர்மலமும் உண்டா! அன்றி அவனுடைய போதனைக்கு வசப்பட்டுத் தவிக்கும் தர்மலிங்கத்திற்குத் தான் மனச்சாந்தி உண்டா! அப்போதனையின் பயனாக ஏற்பட்டுள்ள பாதகத்திற்கு ஆளாகித் தவிக்கும் ராஜலக்ஷ்மிக்கும், மோஹனனுக்கும் தான் மன அமைதியும் சந்துஷ்டியும் உண்டா?

182991.

ஒவ்வொருவரின் இதயம் ஒவ்வொரு விதமாகப் புயல்காற்றில் கொந்தளிக்கும் அலைகளைப் போலத் தவிக்கின்றது. அவைகளுக்கு சமாதானம் சொல்ல அவர்களாலேயே முடியாது தியங்கி, கலங்கி விட்டார்கள்.

கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் என்பதுபோன்று தர்மலிங்கத்தின் மனம் முற்றிலும் சந்தேகப் பேயின் வசப்பட்டுக் கலங்கிப்போனதால் ஆத்திரத்துடன் மோஹனனைத் துரத்திவிட்டார்; எனினும் மோஹன் வெகு மரியாதையாயும், வணக்கமாயும் கண்ணீர் பெருக பரிதாபத்துடன் சென்ற காட்சி அவர் கண் முன்பே தோன்றாமல் போகவில்லை.

மோஹனனைத் துரத்தி விட்டு அவன் செல்லும் வழியையே சற்று நேரம் நின்று கவனித்தார். அடுத்த வினாடியே மோஹனின் தலை மறைந்தது. அதற்குள் நாகலிங்கமும் கிருஷ்ணனும் அதை வெகு சந்தோஷத்துடன் கவனித்துக் கொண்டிருந்துப் பின்னர் தர்மலிங்கத்தின் முன்பு வந்து "அனியாயத்திலும் அனியாயம். இப்படியும் கெடுமதி கொண்டு அலைவோரை நான் பார்த்ததே இல்லை. இந்த அயோக்யனை இன்னும் சில நாளைக்குக் கவனிக்காது விட்டிருந்தால் இத்தனை வருடங்களாக நற்கியாதியும் புகழும் பெற்று விளங்கும் பத்திரிகையின் வளர்ச்சியே பாழாகி குடும்பத்திற்கும் அபகீர்த்தியே சம்பவித்திருக்கும்." என்று நைஸாகப் பேசினன்.

தர்மலிங்கத்தின் மனத்தில் கொந்தளிக்கும் ஆத்திர நெருப்பில் இவ்வாக்கியம் நெய் ஆஹுதி செய்வது போன்று மீண்டும் கோபத்தைக் கிளப்பியது. தடதட வென்று எழுந்து உள்ளே சென்றார். தனது விடுதியில் ராஜம் தாங்கமாட்டாத துயரத்துடன் ஆசனத்தில் உட்கார்ந்து தன் கைகளை மேஜையின்மீது வைத்து அதற்குள் முகத்தைப் பதித்துக் கவிழ்ந்து கொண்டிருந்தாள்.

அவளுடைய தேகம் அசைந்து குலுங்குவதிலிருந்து அவள் புலம்புவதாக நன்கு தெரியவந்தது. தர்மலிங்கம் அவளை உற்று நோக்கியவாறு "ராஜம்! போதும்: புலம்பியது போதும். வெட்கக் கேடு. நீ புலம்புவதை யாரேனும் கண்டால் கையைக் கொட்டி நகைப்பார்கள். எழுந்திரு. எத்தனையோ கௌரவத்துடனிருந்த என் பிழைப்பின் மானத்தைக் குலைக்கவா நீ எமனாக ஏற்பட்டாய்? சீச்சீ! அவமானம்! அவமானம்." என்று உரத்துக் கூறினர்.

அளவிலாத விசனத்துடன் உட்கார்ந்திருந்த ராஜத்தின் செவியில் இம்மொழிகள் விழுந்தவுடனே அவள் திடுக்கிட்டு நிமிர்ந்து எழுந்தாள். கண்ணைத் துடைத்தபடியே "அப்பா! என்னிடம் அவர் பேசியது ஓர் அவமானமே யல்ல. இதுகாறும் தங்களுடைய பெயருக்குச் சிறிதும் பங்கம் வராது நடந்து வந்த தாங்கள் இன்று அந்த அல்ப ஏழை மனிதனைச் செய்த செய்கை தான் பெரிய அவமானம். அதைவிட அவமானமும், பாபமும் வேறு எதுவுமே இல்லை.

அப்பா! நெருப்புப் பொறி மிகவும் சிறியதுதான். ஆனால் அது பற்றிக்கொண்டால் ஊரே அனர்த்தமாகி விடுமல்லவா! அதுபோன்றுதான் இன்று தங்கள் செய்கை யமைந்தது. உங்களுடைய மனத்தையும் பிறரால் கலைக்கமுடியும் என்பதை யறிய மிகவும் துக்கமாயும் வெட்கமாயுமிருக்கிறது. நான் ஓர் பரம ஏழைத் தாயின் உதிரத்தில் ஊறியவளாகையினால் ஏழைகளின் இருதயம் என்ன பாடு படும் என்பதை என் இதயம் அறிகிறது.—

என்று ராஜம் கூறி முடிக்கு முன்னர் அங்கு வந்த கிருஷ்ணன் அபாரமான கோபத்தை யடைந்து "ஆஹ்ஹா! உனக்கு தந்தையையும் எதிர்த்துப் பேசும் தைரியம் வந்துவிட்டதா! உன்னுடைய நிதானம் ஒன்றும் தெரியவில்லையா!" என்று கூறிக்கொண்டே ராஜத்தின் கன்னத்தில் பளீரென்று இரண்டு அறை விட்டான்.

இவ்வாறு நடக்குமென்று தர்மலிங்கமே எதிர் பார்க்கவில்லையாதலால் தன்னருமை மகள்மீது அடி விழுந்ததை மட்டும் அவரால் சகிக்க முடியவில்லை. அவர் தேகமே துடித்து, கிருஷ்ணனை இழுத்து வெளியே தள்ளி "நாயே! உனக்கு இவ்விவகாரங்களில் யாதொரு சம்பந்தமும் இல்லை. என்னை மீறி உன்னை அதிகாரம் செய்யும்படியான காலம் இன்னும் வரவில்லை. சீச்சீ! வெளியே போ" என்று திட்டினர்.

ராஜம் அடியின் வேகத்தினால் அப்படியே சுருண்டு மேஜையின் மீது சாய்ந்தாள். தர்மலிங்கம் ராஜத்தை நிமிர்த்தி தலையைத் தடவியபடியே கன்னத்தைப் பார்த்தார். கன்னம் வீங்கி 5 விரல்களும் பதிந்து எழும்பி இருந்ததுகண்டு மனம் புண்ணாகித் தவித்தவாறு "கண்ணே! ராஜம்! உன்னை நான் எத்தனையோ புத்திசாலி என்று எண்ணி அகமகிழ்ந்தேன். உன்னாலேயே நான் ஆதியில் பட்ட துன்பங்களை எல்லாம் மறந்து சந்தோஷச் சந்திரோதயத்தில் இருக்கிறேன்.

ராஜம்! நீ அறியாத சிறுமி. உனக்கு எல்லா விஷயங்களிலும் உலகானுபவம் போதாது. அந்த அயோக்யப் பயலை நான் முதலில் வெகு யோக்யனென்று நம்பிவிட்டேன். அவனுடைய செய்கையின்

விபரீதம் நம்மையும், நம் குடும்பத்து கண்ணியத்தையும், நம் புகழ் பெற்ற காரியாலயத்தையும், பத்திரிகையையும் எத்தனை தூரம் தாக்கும் என்பதை சிறுமியாகிய நீ உணரமாட்டாய். இனி அந்த மனிதனின் சகவாஸமே வேண்டாம். இம்மட்டுடன் விட்டுவிடுவதுதான் நலம்.

ராஜம்! தீர்க்கமாக யோசனை செய்து பாரு; எனக்கு வேலை இருக்கிறது. நான் போகிறேன் '' என்று கூறிக்கொண்டே போய் விட்டார். ராஜத்திற்கு இந்த தேறுதல்கள் சமாதானத்தை யளித்து விடுமா! அவள் கண்களும் மனமும் கலங்கி அவளை ஓர் பித்துப் பிடித்தவள் போலாக்கி விட்டன.

அவளுடைய கண்களின் முன்பு மோஹனனின் பரிதாபகரமான உருவம் கண்ணீர் பெருகியவாறு நிற்கும் காக்ஷிதான் படக்காக்ஷி போலத் தோன்றி அவளைப் பின்னும் கலக்குகிறது. தன் அண்ணன் தன்னை யடித்த விசனம் ஒரு புறம் பாதிக்கின்றது. எது பாதித்துதான் என்ன செய்வாள் பாவம். ஒன்றுமே தோன்றாமல் வெகு நேரம் ப்ரமை பிடித்தவள்போல உட்கார்ந்து ஏதேதோ எண்ணமிட்ட வண்ண மிருந்தாள்.

அம் மின்னாள் அதி யூகசாலியும், மானவதியும் சாமர்த்தியம் வாய்ந்தவளுமாகையினால் இந்த விஷயத்தில் தன் தந்தையுடன் அதற்குமேல் பேச்சு வைத்துக் கொள்ளவில்லை. தனக்கு இதனால் அதிகம் மனக்லேசம் ஏற்பட்டதாகவும் பிறருக்குக் காட்டிக் கொள்ளாமல் வெகு ஜாக்ரதையாக நடக்கத் தீர்மானித்து விட்டாள்.

மறுநாள் முற்றும் காரியாலயத்திற்குச் செல்ல மனமிசையாது தவித்தாள். 'காரியாலயத்துத் தொழிலாளர்களுக்கு இவ்விஷயம் எவ்வித நிலைமையில் பரவி இருக்கிறதோ! அவர்கள் இதைப்பற்றி என்ன நினைத்துப் பேசுகிறார்களோ! நம்மைப் பற்றி என்ன விதமாக நினைக்கிறார்களோ!' என்ற எண்ணமும் குழப்பமும் உண்டாகி விட்டதால் சற்று அச்சம் ஏற்பட்டது.

எனினும் அந்த விவரத்தையும் தான் அறியவேண்டுவது அவசியம் என்று தோன்றியதால் அன்று சிறிது நேரம் கழித்து வழக்கம்போல காரியாலயத்திற்குச் சென்றாள். அப்போது காரியாலயத்து தொழிலாளிகளில் சிலர் வேலை செய்துகொண்டே "இது அனியாயத்திலும் அனியாயம் சார்! இம்மாதிரி ஓர் ஏழையின் வயிற்றிலடிப்பது மகா பாதகமல்லவா! ஐயோ பாவம். மோஹனனைப்போல நல்ல மனிதர்கள் அகப்படவே மாட்டார்கள். அவனையா இப்படிச் செய்வது?'' என்று பேசுவதை நம் அரும் கண்மணியாகிய ராஜம் கேட்டுக்கொண்டே சென்றாள்.

இம்மொழிகள் அவள் மனத்திற்கு ஆறுதலும் சமாதானமுமே அளித்தன. அவர்களிடம் இதைப்பற்றி ஏதுவுமே கவனிக்காமல் தன் வேலையை மட்டும் பார்த்துக்கொண்டு போய்விட்டாள். மறுநாளைய பத்திரிகைக்கு என்ன கட்டுரை எழுதுவது, தலையங்கம் எதைப்பற்றி எழுதுவது என்ற யோசனை பிறந்துவிட்டது.

அவளுடைய மனதே சரியில்லாமையினால் எந்த வேலையின் மீதும் மனம் ஓடாமல் தவித்தவாறு உட்கார்ந்து ஆழ்ந்த யோசனை செய்துகொண்டிருந்தாள். அச்சமயம் நாகலிங்கம் ஓர் கடிதமும் கட்டுரையும் எடுத்துக்கொண்டு ராஜத்தினறையில் வந்து "அம்மணி! மன்னிக்கவேண்டும். தாங்கள் ஏதோ பலமாக யோசனை செய்கையில் நான் தடை செய்கிறேன். எஜமானர் வெளியே போயிருப்பதால் இதைத் தங்கள் பார்வைக்குக் கொண்டுவந்தேன்.'' என்று கூறிக்கொண்டே ராஜத்தின் மேஜைமீது வைத்தான்.

ராஜம் மிகுந்த அலக்ஷியத்துடன் அவைகளைப் பாராமல் பேசத்தொடங்கி "ஐயா! இனிமேல் திடீரென்று என்னைக் கேளாமல் என்னறையில் வரவேண்டாம். என் பிதா ஊரில்தான் இருப்பதால் இதற்கு அவசரம் முழுகிப்போகவில்லை. அவர் வந்தபிறகே பார்வையிடலாம்.'' என்று கண்டிப்பாய்க் கூறிவிட்டாள்.

அலக்ஷியம் செய்தும் அதைக் கவனிக்காது பேசத்தொடங்கி "அம்மணி! அந்த அயோக்யப் பயலை உங்கள் பிதா கண்டித்ததற்

காகவா உங்கள் மனம் மாறியிருக்கிறது. இதோ இக் கடிதத்தைப் படித்துப் பார்த்தால் யாவும் விளங்கும். அந்த அயோக்யனால் தங்கள் அருமையான பிதாவின் பெயரும், குணக் குன்றாகிய உங்கள் பெயரும் எத்தனை தூரம் கெட்டுவிட்டதென்பது உங்களுக்குத் தெரியுமா!.......

ராஜம் :—(சீறி விழுந்த தொனியில்) ஐயா! உங்கள் வேலை இம்மாதிரியான சம்மந்தமில்லாத விஷயங்களைப்பற்றி அனாவசிய மாகப் பேசுவதல்ல. உங்கள் காரியம் ஆய்விட்டது; நீங்கள் போக லாம். வீண் வம்பு வேண்டாம். சகல விஷயமும் சர்வேசனுக்குத் தெரியும்—என்று கூறியபடியே சடக்கென்று எழுந்து பக்கத்து அறைக்குப் போய்விட்டாள்.

நாகலிங்கத்திற்கு முகத்திலடித்ததுபோல விருந்தும் அதை சற்றும் பொருட் படுத்தாமல் உதட்டையும் பல்லையுங் கடித்துக் கொண்டு போய்விட்டான். அவன் மனதில் க்ரோத எண்ணமாகிய தீயே மீண்டும் பற்ற வாரம்பித்தது. எல்லாவற்றையும் உள்ளடக்கிக் கொண்டு போய்விட்டான்.

ராஜத்தின் மனம் அன்று முற்றும் தத்தளித்துக் கலங்கித் தவித்தது. அதற்கோர் ஆறுதல் அளிக்க அவளால் செய்யப்பட்ட பிரயத்தனம் முற்றும் வீணாகிவிட்டது. எத்தனை தரம் இவ் வெண்ணத்தை விலக்கி நினைவை வேறு வகையில் மாற்றியும் அவள் கண் முன்பு மோஹனனின் விசனகரமான உருவமும் அவன் என்ன நிலைமையை அடைந்திருப்பான் என்ற பனிச்சென்ற உணர்ச்சியும் அவள் இதயத்தை விட்டு அகலவே இல்லை.

"ஐயோ, பாவம்! இந்த சொல்ப தொகையை நம்பி நோயாளித் தாயுடன் ஜீவித்திருந்த பேதை இனி என்ன செய்வான்! வீணான அபவாதத்துடனும் விலக்கப்பட்டவனின் இதயம் எவ்விதந்தான் தபிக்கும்?" என்ற எண்ணங்களே திரும்பித் திரும்பி அவள் இதயத்தைத் தாக்கித் தாக்கி மறைகின்றன.

"ஆகா! உலகானுபவம் இதுதானா! ஒருவரிடத்தில் உண்மை

யான மதிப்பும் நம்பிக்கையும் பரிசுத்தமான ப்ரீதியும் வைத்து விட்டால் அவைகளின் வேகம் இப்படித்தான் சித்திரவதை செய்யும் போலிருக்கிறது. என்ன கொடிய சம்பவம்! என்ன பரிதாபக்காக்ஷி! மோஹன் எத்தனை சாந்தமான மனிதன்! என்ன பொறுமை! தன்னை ஒரு எஜமானர் அக்ரமமாகக் கூறிக் கழுத்தைப் பிடித்துத் தள்ளும்போதும் வாய் திறவாமலும் கண்ணீர் பெருகத் தலை குனிந்த வண்ணமும் நடந்த காக்ஷி யார் மனதைத்தான் தாக்காது......என்று எண்ணி எண்ணி பெருமூச்சு விட்டுப் புரளுகிறாள்.

நமது மாசிலாத உத்தமசீலனாகிய மோஹன் தன்னுடைய வேலை போய்விட்ட பெருந் துயரத்தைக் காட்டிலும் தன்மீது உயிரையே வைத்துள்ள தாயார் படும் சங்கடத்தைக் கண்டு சகிக்க மாட்டாது உருகுகிறான். எந்த விதத்தில் தான் திடீரென்று இத்தனை பெருந் தொகையைச் சேகரித்துத் தாயின் துயரத்தையும் தீர்த்துக் கண்ணையும் ச்வஸ்தப்படுத்த முடியும் என்ற கவலையே நிமிடத்திற்கு நிமிடம் அவனுடைய உயிரை உறிஞ்சிக் கொன்றுகொண்டே வருகிறது.

தள்ளாத வயதை உடைய கல்யாணி கண் பாதை தாங்கமாட்டாது தத்தளிக்கின்றாள். ஹா! என்னால் சகிக்க முடியவில்லையே! நான் என்ன செய்வேன். மோஹன்! என்னருமை செல்வ மோஹன்! என்னுயிர் நீங்கிவிடலாகாதா! என்னால் நீயும் துன்பப்படுகிறாய்! பரம தரித்திரர்களாகிய நாம் திடீரென்று பணத்திற்கு எங்கே போவது. என்ன செய்வது. ஒன்றும் வழியே இல்லையே! என்னால் இந்த பாதையைச் சகிக்கவே முடியவில்லையே.

குளத்திலோ, கிணற்றிலோ விழுந்து ப்ராணனை விட்டு விடலாமா! தூக்குப் போட்டுக்கொள்ளலாமா! விஷம் உண்டு உயிர் துறக்கலாமா!'' என்றெல்லாம் என் மனம் கட்டுக்கு மீறித் தவிக்கின்றது. நான் என்ன செய்வேன். கண் வலியின் பாதையினால் இம்மாதிரி புலம்புகிறேன். உன்னுடைய பரிதாபத்தையும் பரதேசித் தன்மையையும் நினைக்கும்போது என்னையறியாது துக்கம் பொங்கி

வருகிறது. என்ன செய்வதென்றே தோன்றவில்லையே! மோஹறன்! மோஹறன்......என்று தபிக்கிறாள். கடவுளை எல்லாம் வேண்டுகிறாள்.

இந்த கண்ராவியான நிலைமையை மோஹறன் எவ்விதம்தான் சகிக்கக்கூடும். தாயாரின் கைகளைத் தன் மடியின்மீது வைத்துக் கொண்டு புலம்பியபடியேதன் போதாக் காலத்தை எண்ணிப் பெரு மூச்சு விடுகிறான். ராஜலக்ஷ்மியின் பிம்பம் கண்முன்பு தோன்றி "ஐயோ! நான் என்ன செய்வேன்!" என்று கண் கலங்குவதுபோலத் தோன்றுகிறது.

"நாம் எந்த பாடாவது பட்டு நம் தாயின் கண்ணைச் சரிப் படுத்துவதை வ்ரதமாகக் கொள்ளவேண்டும். நம்மை தன்னுயிரினும் இனியதொரு ப்ரீதியுடன் ஆதரித்த உத்தமியை தற்சமயம் கவனிக்கா விட்டால் நாம் த்ரோகியிலும் த்ரோகியாகிவிடுவோம். நம்மால் கூடிய ப்ரயத்தனங்களைச் செய்துவிடுவது. அதற்குமேல் கடவுள் விட்ட வழி" என்று தீர்மானித்துக்கொண்டான்.

கல்யாணியம்மாளுக்குப் பலவிதமான தேறுதல் வார்த்தைகளை எல்லாம் கூறினான். அந்தம்மாளின் நிலைமையில் தேறுதல் மொழிகளால் நிம்மதி ஏற்படுமா! அவளுடைய கண்ணின் பாதை நீங்கினு லொழிய அவள் தேகம் கட்டிலடங்குமா! தவிக்கின்றாள். ஆ! ஆ! என்று அலற்றுகிறாள்.

மோஹறன் தனக்குத் தெரிந்த ஒருவரிடம் சென்று தன்னுடைய சகலமான நிலைமையையும் கூறி "எப்படியாவது இச்சமயம் 150 ரூபாய் என்னை நம்பிக் கொடுக்கவேண்டும். என் தாயாரின் கண் போய்விடுமாயின் என்னுயிரே போய்விடும். என்மீது கருணை பிறக்கவேண்டும். நான் எப்பாடாவது பட்டு உங்கள் கடனைத் தீர்த்துவிடுகிறேன். நான் எவ்வகையில் தீர்ப்பேன் என்ற சந்தேகம் வேண்டாம். என்னையே நான் அடிமையாக்கியேனும் உங்கள் கடனைத் திருப்பிவிடுவேன்." என்று கெஞ்சிக் கேட்டான்.

அதற்கந்த மனிதர் "மோஹறன்! இத்தகைய ஆபத்தான

நிலைமையா உண்டாகிவிட்டது. ஐயோ! நான் என்ன செய்வேன். என் கதைகள் உனக்குத் தெரியாதுபோலிருக்கிறது. பல துஷ்டர்களுக்கும், அயோக்கியர்களுக்கும் கைப்பதிலாக கடன் கொடுத்தும், ஜாமீண்டு கையொப்பமிட்டும் என் தலைக்கே தீம்பு வந்தது. சொத்தெல்லாம் போய்விட்டது. நான் தப்பியதே தம்பிரான் புண்ணியமாகிவிட்டது. மஞ்சள் காகிதம் (இன்ஸால்வென்ஸி) கொடுத்து விட்டேன். நானே பாபர். என்ன செய்வேன். பெண்டாட்டி பிள்ளைகளை போஷிக்கவும் வகையின்றி தாய் வீட்டிற்கு அனுப்பி விட்டேன்.'' என்று எதிர் துக்கத்துடன் இழவு கூறிவிட்டார்.

அதற்குமேல் என்ன செய்வான் பாவம்! தன் தங்கையின் அல்ப உடை ஒன்றிற்காக அலைந்து திரிந்து வாடிய மனோகரனின் கதை அவன் ஞாபகத்திற்கு வந்தது. (கௌரீமுகுந்தன் என்கிற அதி அற்புதமான நாவலை வாங்கிப் படித்து மகிழுங்கள். விலை ரூ.1—12 தான். "ஜகன்மோகினி'' ஆபீஸ், 26, தேரடித் தெரு திருவல்லிக்கேணி சென்னை.) சாதாரண உடைக்கே அவன் அத்தகைய கஷ்டப் பட்டதைப் படித்துக் கண்ணீர் வடித்தேனே!

நானே கேவலம் பிகாரி. பரம தரித்திரன். அனாதை. எந்த விதத்திலும் லாயக்கற்ற என்னை நம்பி 150 ரூபாய் யார் கொடுப்பார்கள்? ஒருபோதும் ஒருவரும் கொடுக்கமாட்டார்கள். என்னுடைய நிலைமையை நான் அறியாமல் பிறரைக் கேட்டு வருந்துவது முட்டாள்தனமன்றோ! தனவந்தர்களையே தனவந்தர்கள் நம்பாத காலம் இது. அவர்களையே பிறர் ஏமாற்றும் காலம். இந்நிலைமையில் எனக்குக் கொடுக்க மனம் வருமா......

கருணாநிதே! கருடவாகனா! ஆபத்ரக்ஷகன் என்ற பெயரை நீ மறந்தாயா! எனக்கு இத்தகைய ஆபத்தை மட்டும் கொடுத்துவிட்டு ரக்ஷிக்க வழி காட்டாது இருக்கிறாயே! என் தாயின் பரிதாபத்தைக் கண்டு என்னால் சகிக்க முடியவில்லையே! நான் எந்த வழியில் இந்த தொகையை சம்பாதிக்க முடியும். எங்கேனும் சென்று திருட நினைத்தாலும் என்னுடைய துரதிருஷ்டத்தினால் கிடைக்காது

போய் நான் அகப்பட்டுக் கொள்வேன்.......ஹா! என்ன சோதனை. என்ன வேதனை...என்று சலித்துப் போய்விட்டான்.

நாட்களோ சென்றுகொண்டே இருக்கின்றன. டாக்டரோ உடனே கண்ணை கவனிக்காவிட்டால் கண்ணே போய்விடும் என்று கூறிவிட்டார். ஒவ்வொரு நிமிடமும் மோஹனின் உயிர் தத்தளிக்கின்றது. கல்யாணியம்மாளுக்குத் தெரிந்த ஒரு பெரிய மனிதரிடம் சென்று மோகன் தன் குறைகளை முறையிட்டு உதவி வேண்டினன்.

அந்த மனிதர் தனக்கு கண் வைத்தியரையே நேரில் தெரியுமென்றும் அவரிடம் சொல்லி தான் சிபார்சு செய்து தர்மத்திற்கே செய்யும்படியாகக் கூறுவதாகவும் சொன்னர். இந்த மொழி மோகனனின் உயிர் தவிப்புக்கு ஜீவாம்ருதம் கொடுத்ததுபோலிருந்தது.

அம்மனிதர் மறுநாள் தன்னை வந்து பார்ப்பதாகத் தெரிவித்ததால் சந்தோஷத்துடன் வீட்டிற்கு வந்து தாயிடம் இந்த விஷயங்களைக் கூறினன். மறுதினத்தையே வெகு ஆவலுடன் எதிர்நோக்கினர்கள். மறுதினம் மட்டும் வந்து சென்றுவிட்டதேயன்றி அம்மனிதர் வரவே இல்லை.

மோஹனின் மனம் உடைந்தது. "இம்மாதிரி ஏமாற்றுவதும் ஓர் பெரிய மனிதரின் செய்கையா! ஹா! கடவுளே! என் செய்வேன்?" என்று தவித்தவாறு மீண்டும் அங்கு சென்று விசாரித்ததில் அம்மனிதர் அன்று காலைதான் இரண்டு மாத லீவில் வெளியூருக்குப்போய் விட்டதாகத் தெரிவித்தார்கள்.

சில பெரிய மனிதர்களுக்கு இம்மாதிரி செய்வது மிகவும் சாதாரணமாகி விடுகிறது. தம்மால் ஆகாத காரியத்தைச் சாதித்து விடுவதாக ஏன் ஓர் ஆசையை ஊட்டவேண்டுமோ தெரியவில்லை. மோஹன் வீடு திரும்பினன். "கையில் காலணவிற்கு வழி இல்லாத மனிதனின் வாழ்க்கையோர் வாழ்க்கையா! இத்தகைய ஆபத்தை நான் இனி ஜெயிப்பதாவது. தாயின் உயிர் இந்த பாதையுடன்

நீங்கவேண்டும். அதே நிமிடம் நானும் தற்கொலை புரியவேண்டும் இவைதான் இனி நடக்கக் கூடியவை......

ஆம்......ஆம்......நாம் ஏன் இன்னொரு வழியை மட்டும் விட்டு விடவேண்டும்? அதையும் பார்த்துவிட்டால் என்ன? கடவுள் விட்ட வழியாகட்டும். மகா உத்தம சிகாமணியாகிய ராஜலக்ஷ்மிக்கு என்னவோ என்னிடத்தில் அபாரமான மதிப்பும் நம்பிக்கையும் அன்பும் இருக்கின்றன. நாம் அம்மின்னுளின் காலிலேயே விழுந்து கெஞ்சிப் பார்த்தால் ஒருகால் உதவி செய்வாளல்லவா! அந்த கடைசி வழியையும் பார்த்தே தீருவது.........

அவளுடைய பிதாவாவது வேறு யாராவது பார்த்துவிட்டால் என்ன நேருமோ! நம்மால் அம்மங்கைநல்லாளுக்கே ஆபத்தாக முடிந்துவிட்டால் என்ன செய்வது......எது எப்படியாயினும் சரி. நான் ராஜத்தைக் கடைசீதரமாகச் சந்தித்துக் கேட்டுவிடுவதே சரி. என்ற தீரமான முடிவுக்கு வந்தான்.

அப்போது சூரியன் நன்ருக அஸ்தமித்து விட்டான். எங்கும் இருள் சூழ்ந்து கொண்டது. நீல நிற வானத்தில் புகைபோல மப்பும் பனியும் கப்பிக்கொண்டிருந்தன. ஆங்காங்கு சில நக்ஷத்திரங்கள் மட்டும் சிறிது ப்ரகாசிக்கின்றன. மந்தமாருதம் சிலுசிலு என்று வீசியது. காற்றில் மரங்கள் சலசலவென்று அசைந்து தன்னரசு புரிந்தன.

மோஹன் ஒரு மேல்துண்டை மட்டும் போர்த்திக்கொண்டு செல்லுமிடத்தில் தனக்கு உதவி கிடைக்கவேண்டுமே ஈசா! என்று அதே த்யானத்துடன் செல்கிருன். ராஜம் தினந்தோறும் தன்னறையின் வெளி வராண்டாவில் உலாவுவதும் பத்திரிகைகள் படிப்பதும், செடிகளைச் சுற்றி பார்வையிடுவதும் வழக்கம். அதை மோஹன் அறிவானுதலால் அந்த இடத்தையே நாடிச் சென்ருன்.

அங்குள்ள ஓர் மேடையின் மீது ராஜம் படுத்துக்கொண்டு ஏதேதோ சிந்தித்தபடியே வானத்தை நோக்கிக் கொண்டிருந்தாள். இடை இடையே பெரிய மூச்சு விடும் சப்தத்தைத் தவிர வேறு

சப்தமே இல்லை. மோகனுக்கு ராஜத்தின் நிலைமையைப் பார்த்தால் ஏதோ விசனத்துடன் ஆழ்ந்த யோசனையிலிருப்பது போன்று தோன்றியதால் அவளை எப்படிக் கூப்பிடுவது என்று சற்று தியங்கினான்.

அடுத்த நிமிடமே அவனுக்கு திகில் பிடித்துக்கொண்டது. அதாவது தான் தாமதப்பட்டால் யாரேனும் வந்துவிடுவார்களோ! என்னவோ! ஆகையினால் தியங்கக்கூடாதென்று எண்ணி மெல்ல அவ்வாசனத்தினருகில் சென்று மெல்லிய குரலில்“அம்மணீ! உத்தம குணத் தாயே!......ஏழை, மோகன் வந்தனம் செய்கிறேன்.’’ என்று தழதழத்த குரலில் கூறினான்.

தன்னையே மறந்து கண்ணில் நீர் ததும்பப் படுத்திருந்த ராஜத்தின் செவியில் இம்மொழிகள் விழுந்த உடனே அவளையறியாமல் தேகம் ஒரு குலுக்கு குலுங்கியது. அலறிக்கொண்டு எழுந்து சப்தம் வந்த திக்கை நோக்கினாள். வறுமையினாலும், விசனத்தினாலும் அவமானத்தினாலும் குன்றிப்போய் கேவலம் மெலிந்துவிட்ட மோஹனின் உருவம் வெகு தாழ்மையுடனும் பரிதாபத்துடனும் நிற்பதைக் கண்டதும் அவள் இதயத்தில் சடக்கென்று ஊடுருவிப் பாய்ந்து ஓடிய ஓர் தடுக்கக் கூடாத மின்சார பாணத்தின் சக்தியை அவளால் உணரவேமாட்டாது இமை கொட்டும் நேரம் தம்பித்தாள்.

‘‘மிஸ்டர் மோஹன்! மோஹன்......என்று கூறி அவனையே உற்று நோக்கினாள். எத்தனை விசனமும், விபரீத ஆபத்தின் கொடுமையில் இதயம் வெடித்து விடும் நிலைமையும் இருந்தபோதிலும் ராஜத்தின் அதிமனோகரமான தோற்றமும், அமுதம் நிறைந்த அன்பான பார்வையின் சக்தியும், இனிய யாழ் போன்ற குரலினால் தன் பெயரைக் கூவியழைத்த அத்புத ஒலியின் வேகமும் ஒன்று கூடி மோஹனனின் ஆயுளில் கண்டிராத ஓர் நூதன இன்ப ஊற்று அவன் தேகத்தில் நரம்புக்கு நரம்பு ஓடியதை அவனால் அறியவே முடியவில்லை.

துன்பக் கேணியிலும் இன்பத் தாமரை பூத்ததுபோல் மோஹனனின் துக்ககரமான நிலைமையிலும் சில விநாடிகள் இன்ப மயமான உணர்ச்சி உண்டாகியதானது அவனையப்படியே மெய் மறக்கச் செய்து விட்டது. தான் எண்ணி வந்த விஷயத்தைக் கூறவும் சக்தியற்றான். ராஜத்தின் உணர்சி நிறைந்த பார்வையில் ஈடுபட்டு ஐக்யமாகி அவளை நோக்கியபடியே நிற்கிறான். இருவரும் பதுமைகள் போல் நின்று விட்டார்கள். காதலின் வலிமையை ஓதிடல் கூடுமோ?

12-வது அதிகாரம்

அன்புத் தேன் மாரி—துன்ப மண் மாரி

உலகத்தில் மக்கள் ஒரு விஷயத்தைப்பற்றியோ, அன்றி அநுபவத்தைப்பற்றியோ முதலில் அறியாதவரையில் அவைகளிடத்தில் பற்று ஏற்படுவது துர்லபம். அறிந்த பிறகோ அதனதன் போக்கில் பற்றுதல் தானே ஏற்பட்டு அது தினே தினே வளர்ந்து ஆழமாகப் பதியவும் ஆரம்பித்துவிடுவது சகஜமல்லவா!

ராஜத்திற்கும் மோஹனனுக்கும் ஏற்பட்ட அன்பானது தன் போக்கில் வளர்ந்து இருவரின் உத்தம குணங்களையும் ஒன்றுக்கொன்று அவரவர்களின் இதயமே ஆராய்ச்சி செய்து முடிவு காட்டிய பின்னர் அன்பு ஆணித்திறமாக மனத்தில் பதிந்துவிட்டது.

அந்த இருள் சூழ்ந்த நேரத்தில் இருவரும் அவ்விடத்தில் தனித்து நிற்கும் அச்சத்தையும் மறந்தார்கள். சில விநாடிகள் சென்ற பிறகே இருவருக்கும் தம்தம் உணர்ச்சி ஏற்பட்டது. அடுத்த நிமிடம் ராஜம் மோஹனனை நோக்கி "மிஸ்டர் மோஹன்! என்னை மன்னிக்கவேண்டும். நான் மகா கொடிய அபராதியாகிவிட்

டேன். என்னாலன்றோ தங்களுக்கு இத்தகைய சம்பவம் நேர்ந்தது. ...மோஹன்...இப்படி உட்காருங்கள். ஏன் நிற்கவேண்டும். இனி மேல் நான் எஜமானியல்லவே! எனக்கு மரியாதைகள் வேண்டாமல்லவா! உட்காருங்கள்'' என்று கனிந்த அன்புடன் கூறினாள்.

இது கேட்ட மோஹன் வெகு வணக்கமாயும் தாழ்மையுடனும் பேசத்தொடங்கி "அம்மணீ! தாங்கள் பிசகாகக் கூறுகிறீர்கள். நான் செய்த கர்மாவை நான் அனுபவிக்கின்றேனேயல்லாது தங்கள் மீது யாதொரு குற்றமும் இல்லை. எல்லாம் என் விதி. என் வினை... தாயே...தாங்கள் என்றைக்கும் எனக்கு எஜமானிதான். நான் உங்கள் காரியாலயத்தை விட்டுப்போய்விட்டதனாலேயே நான் உயர்ந்தவனும், தாங்கள் எஜமானியல்லாமலும் ஆய்விடுமா! அப்படி நான் நினைக்கவில்லை.

ராஜம்.—தாங்கள் எத்தனை பொறுமையாக சமாதானங்கள் கூறி மனத்தைத் தேற்றிக்கொண்டபோதிலும் என்னால் அன்றைய சம்பவத்தை மறக்கவே முடியவில்லை. அதிலும் என் பிதாவுக்குப் போதனை செய்து மனத்தை மாற்றிய அப் படுபாவி நாகலிங்கத்தின் எதிரிலேயே தங்களை அவமானப்படுத்தியதை என்னால் ஆற்ற முடியுமா? நினைக்க நினைக்க பகீர் பகீர் என்கிறது.

மிஸ்டர் மோஹன்! இப்போதும் அந்த சம்பவங்களையும் தங்களுடைய பொறுமையையுந்தான் எண்ணமிட்ட வண்ணம் படுத்திருந்தேன். என் மனத்தை என்னாலேயே சமாதானம் செய்ய முடியவில்லை. தங்கள் மனவேதனை எவ்விதமிருக்குமோ என்று நினைக்கும்போதே என்னை மீறித் துயரம் பொங்குகிறது. தாங்கள் எத்தனைதான் சாந்தம் வகித்தாலும் தங்களுடைய தேகத்தின் இளைப்பும் முகத்தின் மாறுதலுமே உங்கள் மனத்தின் விசனத்தை அளந்து காட்டுகின்றதே. உம். எல்லாவற்றிற்கும் நான்தான் காரணம்.'' என்று கூறும்போதே கண்ணில் நீர்த் துளிகள் சிந்திவிட்டன.

மோஹன்.—அம்மணீ! நிகழ்ந்ததைக்குறித்து இனி சிந்திக்க வேண்டாம். அவைகள் முற்றும் ஓர் கனவின் தோற்றம் என்று மறந்துவிடுங்கள். அம்மா! நான் தற்போது ஓர் பெரிய ஆபத்தான

நிலைமையில் சிக்கிக்கொண்டிருக்கிறேன். என்னை மீறிய துன்பம் சூழ்ந்துவிட்டதனால் நான் இங்கு வந்தேன். இவ் வேழைக்கு இரங்க வேண்டும். கருணைகூர்ந்து உதவி புரியவேண்டும்.

என் தாயாரின் கண் பாதை அதிகரித்துவிட்டது. மரணவஸ்தைப்படுகிறாள். வைத்தியர்கள் பணமில்லாது பார்க்க முடியாதென்று கண்டிப்பாய்க் கூறிவிட்டார்கள். பெருந் தொகை 100 ரூபாயை வைத்தால்தான் கண்ணைப் பார்க்கவே முடியுமாம்; சீக்கிரத்தில் வைத்தியம் செய்யாவிட்டால் கண்ணே போய்விடுமாம். நான் பரம தரித்திரன் என்ன வழியில் நான் அப் பெருந் தொகையைத் தேடி வைத்தியம் செய்வேன். என்னை நம்பி எனக்கு உதவி புரிய முடியுமா!'' என்று தங்களைக் கேட்கத்தான் வந்தேன்.

புறப்படும் வரையில்கூட யோசனை செய்தேன். கடைசியில் துணிந்து புறப்பட்டேன். என்னுடைய நிலைமையில் தற்போது என் தாயாரின் கண்தான் ப்ரதானமாகத் தோன்றி வதைக்கிறது. ஆதலால் நான் மான அவமானத்தையும் துறந்து இங்கு வந்தேன்.'' என்று கண்ணீர்விட்டவாறே கூறினன்

இதைக் கேட்டதும் ராஜத்தின் இதயம் கட்டு மீறித் தவித்தது. தங்கள் தாயாருக்கா இத்தகைய ஆபத்து வருவது. என்ன அனியாயம். "பட்ட காலிலே படும்; கெட்ட குடியே கெடும்'' என்பதுபோல் தங்களுக்கே இத்தகைய கஷ்டங்கள் எல்லாம் வருகிறதே என்ன செய்வேன்?

மிஸ்டர் மோஹன்! தங்களுக்குள்ள இத்தனை கஷ்டத்தில் நான் இப்போது என் விஷயத்தையும் தெரிவிப்பதானது உங்களுடைய விசனத்தை இன்னும் கிளறுவதாக ஆகும். என்ன செய்வேன்! மிஸ்டர் மோஹன்! அன்று அச் சம்பவம் நடந்த பிறகு என் பிதா என்னிடம் பலமான சந்தேகம் கொண்டு என்னை நம்பாது ஏதோ ஒருவாறு நடத்துகிறார்.

அவருடைய மாறுதலை யறிந்த நானும் அவருடைய மனம் போலவே நடந்து வருகிறேன். எப்போதும் என்னிடமிருந்த சாவியை

அன்றுமுதல் தானே வைத்துக்கொண்டார். அதை கவனித்த நானும் என்னை நம்பவில்லை என்பதை நன்குணர்ந்து ஏதோ இரண்டொரு நகைகள் என் தேகத்திலிருந்தவைகளையும் கழற்றிப் பெட்டியிலேயே வைத்துவிட்டேன். அதற்கும் பிதா சம்மதித்தே இருக்கிறார்.

மோஹன்! இவை எல்லாம் காலச் சக்கரத்தின் கோலம். எல்லாவற்றிற்கும் காரணம் அந்த மகானுபாவன் நாகலிங்கந்தான் என்பதில் சந்தேகம் உண்டா! எல்லாவற்றையும் என் மனமறியும். ஆனால் என தந்தை அறியவில்லை. அவரும் அறிவதற்கு ஒரு காலம் வரும் என்றுதான் நான் நம்பி இருக்கிறேன். இச் சமயம் உதவி செய்ய வியலாத நிலைமையில் இருக்கிறேனே! என்ன செய்வேன்? என் மனம் பதறுகிறதே!'' என்று மிக்க விசனத்துடன் கூறி மோஹனனைக் கவனித்தாள்.

"அம்மணீ! தாங்கள் ஆயாசப்படவேண்டாம். எல்லாம் என் விதியின் விளையாட்டு. ஈசனின் சோதனை. ஒருவர்மீதும் குற்றமில்லை. எனது காலக் கொடுமையின் பலம் அத்தகையதாகவிருக்கிறது. நான் சென்று வருகிறேன்.......என்றான் மோஹன்.

ராஜம்:—மோஹன்!...இருங்கள். இதோ என் கை வளையலைக் கழற்றித் தருகிறேன். நான் பிறகு ஏதாவது ஜவாப் சொல்லிக்கொள்கிறேன். அதில் நான்கு சவரன்களாவது கிடைக்கும். விற்று உடனே வைத்தியம் செய்யுங்கள்—என்று கூறிக்கொண்டே தன் கை வளையலைக் கழட்ட வாரம்பித்தாள்.

மோஹன் அதைத் தடுத்து "அம்மணீ! வேண்டாம்; வேண்டாம்....நான் இதற்குச் சம்மதிக்கமாட்டேன். மகா துரதிருஷ்டசாலியாகிய என்னால் தங்களைத் தங்கள் பிதா இத்தகைய நிலைமையில் வைக்க நேர்ந்தது. இன்னும் இதையும் கண்டால் பெருத்த ஆபத்தாகத்தான் முடியும். அதோடு என்னுடைய போதாக்கால நிலைமையில் நான் இதைக் கொண்டு சென்றாலும் இதை எங்கேயோ திருடிவிட்டதாகப் பிடித்துக்கொள்வார்கள். அதோடு என் தாயின் உயிர் நீங்கிவிடும்; என்னுயிரும் போய்விடும்.

அம்மணீ! இவ் வேழையின்மீது இத்தகைய அன்பு இருக்

கிறதே அதுவே போதும். என்னால் தங்களுக்கு துன்பம் வேண்டாம். நான் சென்றுவருகிறேன். இனி எப்போதேனும் பார்க்கும் ப்ராப்த மிருந்தால் நான் பரம பாக்யவானாவேன். உத்திரவளியுங்கள். நான் வருகிறேன். இந்நேரம் என் தாயார் என்ன நிலைமையிலிருக்கி றார்களோ! அவர்களைத் தனியே விட்டு வரவும் மனம் வரவில்லை. எங்கே பாதை பொறுக்காது தற்கொலை செய்துகொள்கிறார்களோ வென்றும் பயமாகவே இருக்கிறது. அம்மணீ!...என்று மேலே பேச மாட்டாது அசைவற்று நின்றான்.

ராஜத்தின் மனம் தவிக்கின்றது. என்ன செய்வாள் பாவம்! கண்ணில் நீர் பெருகுகின்றது. "மோஹன்! இச்சமயம் கைவிட்டு விட்ட நான் ஒரு மனுஷியா! என்னை சித்திரவதை செய்கிறது. கட வுளின் சோதனை இது...ஐயோ! ஐயோ! தாங்கள் உடனே போய் விடுங்கள். அதோ என் பிதாவும் நாகலிங்கமும் பேசிக்கொண்டு வரும் குரல் கேட்கிறது. ஒரு தரம் என்னால் தாங்கள் அவமானப்பட்டது போதும். மோஹன்! மோஹன்! குரல் நெருங்குகின்றது. போய் விடுங்கள்...என்று பதைபதைத்துக் கூறினாள்.

இருவர் விழிகளும் கூரிய அம்புகள்போல் ஒன்றோடொன்று தாக்கிக்கொண்டன. அதன் அபூர்வமான ஜீவ சக்தியின் எல்லையைக் கண்டு உரைக்கவல்லதா! மோஹன் மகா உத்தமன். மானமே ப்ர தானமாகக் கொண்ட வீரன். ஆகையினால் அவன் அதற்குமேல் அங்கு நிற்காமல் "அம்மணீ! இதோ போய்விடுகிறேன்; நான் ச்ரமங் கொடுத்ததற்கு மன்னிக்கவும். போய்வருகிறேன்" என்று கூறிக் கொண்டே ராஜத்தை நோக்கியபடியே விரைவில் அவ்விடத்தை விட்டு மறைந்தான்.

ராஜம் அதே ஆசனத்தில் விசனத்துடன் படுத்துவிட்டாள். அடுத்த விநாடியே தர்மலிங்கமும் நாகலிங்கமும் அவ்விடத்திற்கு வந்தார்கள். ராஜம் இவர்கள் வந்ததை அறியாதுபோலவே படுத் திருந்தாள். தர்மலிங்கம் ராஜத்தின் பக்கத்தில் அமர்ந்து "ராஜம்! ராஜம்! ஏன் படுத்திருக்கிறாய்? உடம்புக்கு என்ன எழுந்திரம்மா!" என்று வெகு அன்போடு கூறினார்.

ராஜமும் அப்போதே அறிந்தவள்போல எழுந்து உட்கார்ந்து "அப்பா! எனக்கு உடம்பு ஒன்றுமில்லை. வெறுமைதான் படுத்துக் கொண்டேன்" என்றாள்.

தர்மலிங்கம்:—நாகலிங்கம்! உட்காரு. நிற்பானேன். அம்மா!, ராஜம்! நமது நாகலிங்கத்தின் பிதா கடிதமெழுதி இருக்கிறார். அதாவது அவருக்கு வெகு தூரத்துப் பங்காளிகள் யாரோ பிள்ளை இல்லாது இருந்தார்களாம்; அவர்களுக்கு ஏராளமாக சொத்து இருந்ததாம். அவர்கள் வயது முதிர்ந்துவிட்டதால் சொத்துக்களை எல்லாம் நமது நாகலிங்கத்திற்கே உயிலெழுதி வைத்துவிட்டு இறந்துவிட்டார்களாம்.

அத்தனை சொத்தும் திடீரென்று சேர்ந்துவிட்டதால் பெரிய பெரிய செல்வவந்தர்களெல்லாம் நான், நீ என்று பெண்ணைக் கொடுக்கப் போட்டியிட்டு வருகிறார்களாம். ஒரு மாதமாவது லீவு எடுத்துக் கொண்டு வந்தால் இஷ்டமான பெண்ணைப் பார்த்து விவாகம் செய்துகொண்டு போகலாம். எனக்கும் வயதாகிவிட்டது. நானும் கண்டு களிக்கவேண்டும் என்று கடிதம் எழுதி இருக்கிறார்.

அக்கடிதத்தை இவர் என்னிடம் காட்டினார். இவருக்கு வேறு யாரையும் விவாகம் செய்துகொள்ளவே ப்ரியமில்லையாம். மணந்தால் உன்னை மணப்பது; இல்லையேல் ப்ரம்மச்சாரியாகவே இருப்பது என்று முடிவு கட்டிக்கொண்டு அதையே அவர் தந்தைக்குக் கடிதம் எழுதும்போது நான் பார்த்துவிட்டேன்.

செல்வி! ராஜம்! இவரை விட சரியான வரன் வேறு கிடைப்பது துர்லபம் என்றுதான் நான் நினைக்கிறேன். மனிதர் யோக்யர். இவர் நல்ல ராசிக்காரர். இவருடைய முயற்சியினால் பத்திரிகையின் வளர்ச்சி அதிகரிப்பதை நான் கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். இவரையே நான் மருமகப்பிள்ளையாக அடைந்துவிட்டால் பத்திரிகையின் கவலை என்னை என் அந்திம காலத்தில் விட்டொழியும். இவரே அதை அக்கரையாக நடத்துவார்.

அதோடு உன்னை மணக்க இவர் இத்தனை ஆவல்கொண்டிருப்பதை நான் கண்ட பிறகு என் மனம் சந்தோஷமே அடைகிறது.

ராஜம்! என்ன எல்லாவற்றிற்கும் மவுனமே சாதிக்கிருயே! இவருக்கு இதுகாறும் பணம் அதிகமாக இல்லையே என்கிற குறை இருந்தது. அதுவும் இனி நீங்கிவிட்டது. எனக்கு பரம த்ருப்தியாகவிருப்ப தால் அவரையும் நேரில் அழைத்து வந்தேன். உன்னபிப்ராயம் என்ன? கூறு'' என்ருர்.

இந்த வார்த்தைகள் ராஜத்திற்கு எப்படி இருந்திருக்குமென்று கூறவேண்டுமா? "ஆகா! இதுவும் ஒன்று வந்து சேரும் என்று எதிர் பார்த்தபடியே முடிந்தது. ஊம், இந்த அயோக்ய சிகாமணியை நான் மணப்பதா! சீச்சீ! இவர்கள் கண் முன்பு என்னுயிரையே விடு வேனேயன்றி இவனுக்கு மாலே சூட்ட இஜ் ஜன்மத்தில் சம்மதிக்க மாட்டேன்.'' என்று தனக்குள் நினைக்கும்போது அதி சாந்தமூர்த்தி யாயும், உத்தம சீலனயும் விளங்கும் மோஹனனின் மிகவும் பரிதாப கரமான பார்வையும் எழில் நிறைந்த காம்பீரத் தோற்றமும் திரைக் காக்ஷியைப்போல் கண் முன்பு தோன்றியது.

இமை கொட்டும் நேரம் அப்படியே ப்ரமை கொண்டவள் போலவிருந்தாள். மோஹன் கூறிய அதிவிசனமான விஷயங்கள் நினைவில் தாண்டவமாடுகின்றதால் பதில் கூறுவதற்கும் பிடிக்க வில்லை. இவனேத் தன் தந்தை இத்தனே தூரம் நம்பி இருக்கையில் தான் இவனுடைய அயோக்யத்தனத்தை எத்தனே எடுத்து உரைத் தாலும் அது வீருது. சமயம் பார்த்துத்தான் தெரிவிக்கவேண்டும்.'' என்று மனத்திற்குள் தீர்மானித்துக்கொண்டாள்.

பின்னர் தந்தையை நோக்கி "அப்பா! என்னே மன்னிக்க வேண்டும். எனக்கு விவாகம் என்றுலே பிடிக்கவில்லே. விவாகமெல் லாம் மக்களின் மகிழ்ச்சிக்கும் சந்தோஷத்திற்கும் குடும்ப வ்ருத்திக் கும் ஒன்ருகப் பிணேக்கப்பட்டதேயன்றி கட்டாயத்தில் ருசிக்காது என்பது தங்களுக்குத் தெரியாதா! எனக்கு தற்போது விவாகமே வேண்டாம். எனக்கு விவாகத்தில் ஆசை ஏற்படுங் காலத்தில் தெரி விக்கிறேன். தயவு செய்யவேண்டும்'' என்று தனது கருத்தை அழுத் தமான குரலில் தீர்மானமாகத் தெரிவித்துவிட்டாள்.

தர்ம:—ராஜம்! நீயோ சிறுமி. அறியாத்தனமாய்ப் பேசுகிறாய். கண்ட நாவல்களைப் படித்து ஏதோ மூட நம்பிக்கை கொண்டு இம் மாதிரி பிடிவாதம் செய்கிறாய். எனக்கும் வயதாகிவிட்டது; என் காலத்திலேயே உனக்குக் கல்யாணத்தைச் செய்து உனக்குக் குழந்தைகள் பிறந்து நான் பார்த்து சந்தோஷப்படவேண்டாமா!

ராஜம்! நான் ஆதியில் மிகமிக கஷ்டப்பட்டவனாகையினால் என்னுடைய இக் காலத்திலாவது சந்தோஷமடைய வேண்டாமா! என் காலத்திற்குப் பிறகு உன்னை கவனிக்க யார் இருக்கிறார்கள்? உன் சகோதரனின் நிலைமையோ முற்றும் தெரிந்ததே! அவனால் உன் விஷயத்தில் நன்மையை எதிர் பார்ப்பதானது ஊமையன் சங்கீதம் பாடுவதுபோலத்தான் ஆகும்.

ஆகையினால், ராஜம்! என் விருப்பத்தைக் கெடுக்காதே. உனக்கென ஓர் காப்பாளர் அத்யாவசியம். அதை சரியானபடி நான் தேடிச் செய்துவைப்பது என் கடமையல்லவா! என்ன யோசிக்கிறாய்?'' என்று ஒருவிதமான இரக்கத்துடன் கேட்டார்.

நாகலிங்கம் குத்துக்கல்லுபோல எதிரே உட்கார்ந்து ஒரு பாபமும் அறியாத சாதுபோல இருப்பதைக் காணக் காண ராஜத்தின் மனதிற்குள் ஆத்திரம் பொங்குகிறது. அவனுடைய உண்மை தெரிந்தால் தன் பிதாவே அவனை மணக்கவேண்டாம் என்று கண்டிப்பாய் கூறுவார். தக்க சமயம் பார்த்துக் கூறிவிடுவதே சரி! இப்போது ஏதேனும் சாக்கு சொல்லி யனுப்பிவிடவேண்டும். இப் பாவியின் எதிரில்கூட இருக்கப் பிடிக்கவில்லை'' என்று தனக்குள் நிச்சயித்துக்கொண்டாள்.

''அப்பா! தங்களுடைய மகிழ்ச்சி மயமான வாழ்க்கையையே நான் கோருபவளேயல்லாது வேறு என்ன எனக்கு வேண்டும். விவாகம் என்பது ஆயிரங்காலத்துப் பயிராகையினால் அதை வெகு வெகு தீர்க்கமாக யோசித்துச் செய்யவேண்டுமல்லவா! இன்று செய்து நாளையழிப்பதன்று. ஆதலால் நான் தீர்க்கமாக யோசனை செய்து இன்னும் சில தினங்களில் கூறுகிறேன். மன்னிக்கவேண்டும்'' என்று கூறிவிட்டாள்.

தர்மலிங்கமும் அதையாமோதித்து அப்படியே செய்யும்படிக் கூறிவிட்டு நாகலிங்கத்துடன் சென்றுவிட்டார். ராஜத்தின் மனத்தில் ஏற்கெனவே இருந்த கவலையுடன் இந்த விஷயமும் சேர்ந்து விட்டதால் கூறத் திறமற்ற கலக்கமும் வேதனையும் உண்டாகிவிட்டன. எல்லாவற்றையும்விட மோஹனனின் விஷயமும், தான் இச் சமயம் உதவி புரிய முடியாமல் போய்விட்டதற்காக வருத்தமுமே முதன்மை ஸ்தானம் பெற்று இவளை வாட்டுகின்றன. தான் இனி எந்த வழியில் மோஹனனுக்கு உதவி புரியலாம் என்ற யோசனையிலேயே ஈடுபட்டு அவ்விடத்திலேயே குழம்பிப்போய்ப் படுத்துவிட்டாள். நேரமும் ஏறிக்கொண்டே செல்கின்றது. செய்வதறியாது இளம்பாவையின் உயிர் துடிப்பதன் ரகஸியத்தைப் பெற்ற தாயாயினும், தந்தையாயினும் உடன்பிறந்தோராயினும் அறியக்கூடுமா! அந்த சர்வேச்வரனுக்கே வெளிச்சம்.

13-வது அதிகாரம்.

இன்பத்தின் நிழலில் எரிமலை புரண்டது

உலகத்தில் மக்களுக்கு இன்பத்திற்கு இன்பக்கண்ணீர், துன்பத்திற்குத் துன்பக்கண்ணீர் வருவது இயற்கையானவை. நமது இளவலான மோஹனனுக்கு தற்சமயம் மேற்குறித்த இரண்டு விதமானக் கண்ணீரும் ஏக காலத்தில் பொங்கி வழிகின்றன. ராஜத்தின் அரிய சந்திப்பினாலும், ஆர்வம் நிறைந்த ஆப்தமான அன்பினாலும், ஆழ்ந்த கருத்தடங்கிய அன்பான பார்வையின் சக்தியினாலும் அபரிமிதமான இன்பமேலீட்டால் இன்பக்கண்ணீர் பெருகுகின்றது.

தன் தாயின் பரிதாபகரமான பாதையையும் தன்னுடைய ஏழ்மைத்தனத்தையும் நினைக்கையில் துன்பம் தாங்கமாட்டாது

கலக்கி விடுகின்றது. இவ்விரண்டு உணர்ச்சிகளோடு தள்ளாடிய படியே ராஜத்தினிடம் விடை பெற்று வீடு வந்து சேர்ந்தான்.

கல்யாணியம்மாளின் உபாதை அதிகமாகிக்கொண்டே வருவதால் அந்தம்மாளுக்கு அடிக்கடி மயக்கமுண்டாக வாரம்பித்துவிட்டது. என்ன செய்வான் மோஹன்! அவன் சரியாக ஆகாரம் உட்கொண்டு எத்தனையோ நாளாகிவிட்டது. களைப்பு ஒரு புறம் அவனைத் தள்ளுகிறது. கல்யாணியம்மாள் தன் பொருட்டாக ஆதிமுதல் காட்டிய த்யாகத்தை நினைக்கையில் தான் இம்மாதிரி ப்ரதியுபகாரம் செய்ய வகையின்றி இருக்கிறோமே என்ற அபாரமான விசனம் கட்டுமீறிப் பாதிக்கின்றது.

அவனுடைய மனோ நிலைமையில் எங்காவது திருடியாவது தன் தாயின் பாதையைக் குணப்படுத்திவிடலாமாவென்றும் தோன்றுகின்றது. அடுத்த நிமிடமே "சேச்சே! அப்படிச் செய்வது மகா பிசகு!" என்று தன்னைத்தானே சமாதானம் செய்து தத்தளிக்கின்றான். அனலிடை மெழுகென உருகினன்.

அச்சமயம் "மோஹன்!" என்று யாரோ கூப்பிடுவதை யறிந்து எழுந்து சென்றான். அப்போது மணி 10க்குமேலிருக்கும். வீதியில் இவனை அழைத்த கிழவனார் முன்பின்னறியாத மனிதராயினும் அன்பாகப் பேசத்தொடங்கி "ஐயா! நான் உமக்கு முற்றிலும் புதிய மனிதனுகையால் என்னை உமக்குத் தெரியாது.

இருப்பினும் மனிதர்களுக்குரிய இயற்கைக் குணத்தினுல் நான் இங்கு வந்தேன். அதாவது அன்று ஆஸ்பத்திரியில் நீர் உமது தாயாரை வைத்துக்கொண்டு தவித்த தவிப்பை நான் நேரில் கண்டேன். என் மனம் உருகியது. உமக்கு உதவி புரியச் சக்தியற்றவன். இதுபரியந்தம் எத்தனையோ வகையில் ப்ரயத்தனம் செய்து பார்த்தும் பலிக்கவில்லை.

கடைசியில் ஒரு யோசனை தோன்றியது; உடனே வந்தேன். இதோ இக்கடிதத்தை நான் கூறும் விலாசத்திற்குக் கொண்டு இப்போதே கொடும். அந்த புண்ணியவான் கட்டாயம் பரோபகாரத்திற்கே ஜீவித்திருப்பதால் உதவி செய்வார். அவர் இன்றுதான் ஊரிலிருந்து வந்ததை இப்போதே அறிந்தேன்; ஆதலால் வந்தேன்.

நாளைக் காலையில் அவர் மறுபடியும் வெளியூருக்குச் செல்வதால் உடனே நீர் ஒரு பைஸிகல் வாங்கிக்கொண்டு போய் வாரும். அகால மென்று மயங்காதேயும். இதுதான் என்னால் செய்யக்கூடிய உப காரம்'' என்று வெகு நயமாயும் ஆழ்ந்த அன்புடனும் கூறினர்.

இந்த வார்த்தையைக் கேட்ட மோஹனனுக்கு சாக்ஷாத் கடவுளே தன் முன்பு நேராக உதவி புரிய வந்துவிட்டதுபோலான சந்தோஷமும் ஆச்சரியமும் ஒருங்கே கூடி அவனைப் பரவசமுறச் செய்தன. கிழவரின் காலில் விழுந்து வணங்கினன். வாயாரத் தோத் திரம் செய்தான். பெரியவரே! தற்சமயம் நீங்கள்தான் பேசுந்தெய் வம் என்று புகழ்ந்தவாறே கிழவர் கொடுத்த கடிதத்தை வாங்கிக் கொண்டான்.

உடனே தன் தாயிடம் ஓடி இச் சந்தோஷச் செய்தியைத் தெரிவித்து'' அம்மா! நான் இப்போதே சென்று வருகிறேன். பய மொன்றுமில்லை. கடவுள் இருக்கிறார். நீ ஜாக்ரதையாயிரு'' என்று கூறிவிட்டு அவனுக்குத் தெரிந்த ஒருவனின் சைகிளை இரவலாக வாங்கிக்கொண்டு அந்த இடத்திற்கு அதிவேகமாகச் சென்றான்.

அவனுக்கு இருந்த சந்தோஷத்தை அளவிட்டுக் கூறத்திறமா! இரவுகாலமாயிற்றே! என்ற பயமும், சிரமமும்கூடத் தெரியவில்லை. அவன் கண்முன்பு தன் தாயாரின் உருவமே தெரிந்து அவனை ஊக் கியதால் இரவு சுமார் 11 மணிக்குமேல் அக்கடிதத்தில் கண்டுள்ள விலாசத்தை யடைந்தான்.

இராக்காலமாகையினால் இருள் சூழ்ந்திருந்தது. நிச்சப்தம் குடிகொண்டிருந்தது. ஆங்காங்கே சில நாய்கள் குரைப்பது மட்டும் சப்தமிருந்ததால் அந்த விடத்தில் தூர தூர பங்களாக்கள் இருப் பதாக மோஹன் ஊகித்தறிந்துகொண்டான்.

சைகிளுடன் பங்களா தோட்டத்தைக் கடந்து பங்களாவின் கட்டிடத்தை அடைந்தான்'. இந்த நிசிவேளையில் எவ்வாறு கதவை இடிப்பது?' என்று சற்று தியங்கினன். ஆபத்திற்கு பாபமில்லை யாகையினால் எழுப்பித்தான் ஆகவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு கட்டிடத்தின் படி ஏறி கதவைத் தட்டினன். அச்சமயம் கதவு திடீரென்று தானே திறந்துகொண்டது.

இதுகண்டு வியப்புற்று கதவை நன்றாகத் திறந்த சமயம் பட் டார் என்ற துப்பாக்கி வெடிச்சத்தம் கேட்டு மோஹன் அலறி நடுங்கிவிட்டான். உள்ளே கால் எடுத்து வைக்கவும் பயந்து அஞ்சி ப்ரமித்து நின்றான். அடுத்த நிமிடம் மனத்தை தைரியப்படுத்திக் கொண்டு உள்ளே இரண்டடி எடுத்து வைத்தான்.

அப்போது முகமூடியணிந்த இருவர் வேகமாக எதிரே ஓடி வருவதைக் கண்டு மீண்டும் முன்னிலும் பன்மடங்கு அதிகரித்த திகிலும் பீதியும் அடைந்து நடுநடுங்கி கால்கள் விலவிலக்க நின்றுவிட்டான். வெளிச்சம் சிறிது மங்கலாகவே இருந்தது. மோஹன் வரும்போது எத்தனை சந்தோஷமாயும் உத்ஸாகமாயும் வந்தானோ அதற்கு நேர்மாறாக அவனை மீறிய பயமும் ஒரு விதமான பதை பதைப்பும் அவனைச் சூழ்ந்து வதைக்கின்றன. அவனால் இந்த வெடிச் சத்தத்

தின் விவரத்தையும், முகமூடிக்காரர்களின் மர்மத்தையும் சற்றும் அறியவே முடியாது குழம்பித் தவிக்கின்றான். இது ஏதோ விபரீதம் என்று மட்டும் உணர்ந்து கொண்டான்.

அவன் பின்னும் இரண்டடி எடுத்து வைக்க எத்தனித்த போது முகமூடி உருவங்கள் "அடேய்! நில்லு......நில்லு. உள்ளே போனால் சுட்டு விடுவேன். உன் உயிர் தப்ப வேண்டுமாயின் வந்த வழியே திரும்பி நட. இதோ இரண்டு 100 ரூபாய் நோட்டுக்கள். இவ்விஷயத்தை நீ வெளியிடுவாயானால் ஆபத்து உன்னைத்தான் சேரும். நீதான் குற்றவாளியாக இப்போதே போலீஸாரிடம் ஒப்பு விக்கப்படுவாய். ஜாக்ரதை. உயிர் வெல்லமாயின் ஓடி விடு. இல்லை யேல் உயிரைப் பலி கொடு. ஊம்.........பதில் சொல்லு." என்று துப்பாக்கியை முகத்திற்கு நேராகக் காட்டினார்கள்.

அந்தோ விபரீதம்! இந்த பயங்கர சம்பவத்தில் சிக்கிக் கொண்ட மோஹனின் நிலைமை எப்படித் தானிருக்கும். இங்கு ஏதோ விபத்து நடந்து விட்டது உண்மை என்று தெரிந்து விட்டது. அதைக் காட்டிக் கொடுக்காமல் நாம் இப்பணத்தைப் பெற்றுக் கொண்டால் மகா பாவியாகி விடுவோம். விபத்தைக் காட்டிக் கொடுக்க நினைத்தால், நம்மை அதுவரையில் உயிருடன் விடப் போவதில்லை. உயிரை இங்கேயே போக்கி விடுவார்கள்.

இம்மாதிரி சாவதால் இந்த விஷயத்தையும் காட்டிக் கொடுக்க முடியாது போவதுடன் நம்முடைய தாயாரின் துயரையும் தீர்க் காது அவளையும் தபிக்கச் செய்த கர்ம சண்டாளனாகி விடுவோம். ஆகையினால் இதுவும் ஓர் நன்மைக்கு என்று கடவுள்மீது பாரத் தைப் போட்டுவிட்டு நாம் இப்போது இப்பணத்தைப் பெற்றுக் கொண்டுபோய் தாயாரின் துயரத்தை முதலில் தீர்த்துவிட்டுப் பிறகு இதையும் காட்டிக் கொடுத்துவிடுவோம். இதுதான் சரி", என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டான்.

உடனே பதில் ஏதும் பேசவில்லை. தன்னிரு கைகளையும் அவ் வுருவங்களுக்கு நேராகக் கூப்பினான். பின்னர் நீட்டினான். 2 நோட்டுக்கள் (100 ரூபாய் நோட்டுக்கள்) கையில் விழுந்தன. உடனே அவற்றை தன் சட்டைப் பையில் வைத்துக் கொண்டு திரும்பிப் பாராமல் அந்த இடத்தை விட்டு ஓட்டமாக ஓடி சைகில் இருக்குமிடம் வந்தான்.

அவன் படும் வேதனேயோ கூறத்திறமில்லே. "துப்பாக்கி வெடியின் சப்தம் கேட்டதால் ஏதோ பெரிய கொலே நடந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது. ஹா......என்ன அனியாயம். என்ன அக்ரமம்......... என் மனச்சாட்சி என்னே ஏதோ சித்திரவதை செய்கிறதே!'' என்று தவியாய்த் தவித்தவாறு சைகிலில் புறப்பட்டு விட்டான்.

வரும்போதிருந்த நிலேமை ஒரு கோடியாயும் இப்போதிருக்கும் நிலேமை ஒரு கோடியாயும் ஆய்விட்டது. அவன் முற்றிலும் மாறிப்போய் ஓர் சித்த ப்ரமைக்காரன் போலாகிவிட்டான். "இப்போதே நாம் நேரில் போலீஸுக்குப் போய் தகவல் கொடுத்து விடலாமா!'' என்று நினேக்கிறுன்.

மறு க்ஷணம் தன் தாயின் துன்பம் கண் முன்பு வருவதால் மனம் சபலித்து விடுகின்றது. இத்தகைய நிலேமையுடன் வீட்டிற்கு வந்து சேர்ந்தான். அப்போது ஒரு மணி இருக்கும். தன் தாயார் அப்போதும் அலற்றிக் கொண்டே படுத்திருந்ததைக் கண்டதும்..... "எந்த விதத்திலாவது ஆகட்டும். நாளே இன்னேரம் என் தாயாரின் கண்ணின் உபாதை நீங்கிவிடுமல்லவா! பிறகு எனக்கு என்ன ஆபத்து வேண்டுமாளுலும் வரட்டும். இச்சமயம் இந்த உதவியையும் கடவுளின் அரிய உதவியாகத்தான் கொள்ள வேண்டும்'' என்று மனதைத் தீரமாக திடப்படுத்திக் கொண்டான். எனினும் அங்கு நடந்த சம்பவத்தை அவனுல் மறக்கவே முடியவில்லே.

"யார் உயிர் போய்விட்டதோ! என்ன பாதகம் நடந்து விட்டதோ! முகமூடிக் கள்ளர்கள் யாரோ! ஒன்றும் புரியவில்லேயே! மர்மமாகவே இருக்கிறதே!'' என்ற குழப்பமே மனத்தில் சுற்றிச் சுற்றி அலேகின்றது. இவனேக் கண்ட கல்யாணி 'அப்பா மோஹன்! காயா பழமா!'' என்று பாதையுடன் பாதையாகக் கேட்டாள்.

மோஹன் :—அம்மா! எல்லாம் பழமே. நாளே இன்னேரம் நீ சந்தோஷமாய் பாதையற்றுத் தூங்கலாம்—என்று மட்டும் கூறிவிட்டான். மோஹனுக்கு நித்திரை என்பதே கொள்ளவில்லே. மனம் சுழல் காற்றில் அகப்பட்ட பஞ்சுபோலப் பறக்கின்றது. அவனுல்

தன் மனத்தையே யடக்க முடியவில்லை. குமுறிப் புரண்டவாறு இரவை யோட்டினன்.

மறு தினம் உதயமாயிற்று. மோஹன் அதிகாலையிலேயே ஓர் வண்டியில் தன் தாயாரை அழைத்துக் கொண்டு குறிப்பிட்ட ஆஸ் பத்திரிக்குச் சென்று முதலில் கூறிய வைத்தியரின் உதவியால் பெரிய வைத்தியரைக் கண்டு அவருக்குச் சமர்ப்பிக்க வேண்டிய தொகையை (ரொக்கமாக 100 ரூபாயைக்) கொடுத்துவிட்டு உடனே வைத்தியம் செய்யும்படி வேண்டினன்.

மற்ற 100 ரூபாயை மாற்றி அங்குள்ள மற்ற சில்லரைத் தேவதைகளுக்குக் கொடுத்தான். அன்றய தினமே பெரிய வைத் தியர் கல்யாணியம்மாளை வெகு ஜாக்ரதையாயும், கனிகரத்துடனும் கவனித்து தக்க சிகிச்சை செய்து தனி வார்டில் படுக்க வைத்து விட்டார்.

கல்யாணியம்மாள் இத்தனை நாளாகக் கதறிக் கதறி யழுத பாதை நீங்கப் பெற்று நிம்மதியாகப் படுத்திருந்தாள். மோஹன் தன் தாயாரின் பாதை நீங்கிப் படுத்திருப்பதைக் கண்டு பரம சந் தோஷமடைந்து அவள் பக்கத்திலேயே உட்கார்ந்து விட்டான். அன்று முற்றும் அவன் வீட்டிற்கே வரவில்லை. அன்னகாரத்தை யும் விரும்பவில்லை. தன் தாயாரின் குணத்தைக் கண்டு மகிழ்ந்தவாறே இருந்தான். எனினும் இடை இடையே முதல் நாளைய இரவின் சம்பவம் கண் முன்பு தோன்றுமலில்லை.

மூளைக்கும் கண்ணுக்கும் சம்மந்தப் பட்ட ஒரு நரம்பின் கோளாறினால் இத்தகைய பாதை ஏற்பட்டதென்றும் அதைச் சரிப் படுத்தி விட்டதால் கண்ணுக்கு யாதொரு பயமும் இல்லை என்றும் டாக்டர் கூறியதால் மோஹனுக்கு அளப்பரிய சந்தோஷம் உண் டாகியது. 'இன்னும் ஒரு வாரம் இங்கு இருந்தால் போதும்; பிறகு வீட்டிற்குப் போய் விடலாம். கண்ணுக்குக் கண்ணாடி கொடுத்து விடுகிறேன். சரியானபடி ஆகாரம் சாப்பிட்டு ஓய்வாக விருந்தால் போதும். பழய பலமும் தெம்பும் வந்து விடும்' என்று வைத்தியர் கூறினர்.

இதைவிடச் சந்தோஷம் மோஹனுக்கு வேறு வேணுமா? திடும் திடும் என்ற விஷயம் சற்று நேரத்திற் கொரு தரம் அவன் இதயத்தைத் தாக்கிய போதிலும் கல்யாணி யம்மாளின் நிம்மதியைக் காணக் காண அவனது மனத்திலும் பரம த்ருப்தியும் களிப்பும் உண்டாயின. "அம்மா! உன் பாதை நிவர்த்தியாயிற்று! உன் கவலை சற்று தெளிந்ததா! நிம்மதியாகச் சற்று தூங்கு. நான் இங்கேயே உட்கார்ந்திருக்கிறேன்" என்று அன்பொழுகக் கேட்டான்.

கல்யாணியம்மாள் மோஹனின் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு "என் செல்வா! என் இன்ப மோஹன்! கடவுள் கிருபையினாலும், உன்னுடைய முயற்சியினாலும், அன்பினாலும் என்னுடைய கொடிய பாதை நீங்கியது. என்னப்பனே மோஹன்! என்னால் நீ எத்தனை ச்ரமப்பட்டாயப்பா! உன்னை நான் என் கொடிய பாதையினால் பரம இம்சை செய்துவிட்டேன். என்னை யறியாது நான் உனக்குக் கொடுத்த கஷ்டத்திற்கு வருந்தாதே என் செல்வா!" என்று கெஞ்சிக் கேட்டாள்.

மோஹன்:—(தன் தாயாரைத் தடவியவாறு) அம்மா! தாங்களா இப்படிக் கூறுவது. ஐயோ! இம்மொழி என்னை சோதனை செய்வது போல விருக்கிறது. தாங்கள் எனக்காகப் பட்டுள்ள பாட்டிற்கும், வைத்துள்ள அன்பிற்கும், செய்துள்ள த்யாகத்திற்கும் என் சரீரத்தி லுள்ள தோலைச் செருப்பாகத் தைத்து தங்களுக்குப் போட்டாலும் தீராது. நான் அவ்வளவு செய்யக் கடமைபட்டுள்ளேன்; ஆகையினால் தாங்கள் அப்படிக் கூறவேண்டாம்.

அம்மா! உங்கள் பாதையும் தீர்ந்து உங்களைச் சந்தோஷமாகப் பார்க்கப்போகிறேனா என்று நான் தவித்த தவிப்பு அந்த சர்வேசனுக்குத்தான் தெரியும். எந்த பெரியாரின் புண்ணியமோ இம் மட்டும் வழி கிடைத்தது. அம்மா! நீங்கள் அதிகம் பேசக்கூடாதென்று டாக்டர் சொல்லி இருக்கிறார். நீங்கள் தூங்குங்கள்—என்று சமாதானம் செய்தான்.

கல்யாணியம்மாள் ஆயாசத்துடன் படுத்திருந்தாள். மோஹன் அன்று பூராவும் தன் தாயின் பக்கத்தை விட்டு அசையவே இல்லை.

அவளுக்கான சகல உபசாரமும் தானே செய்து வந்தான். அன்போடு தன் தாயை கவனிக்கும் மும்முரத்திலேயே இருந்ததால் அவனால் வெளி விஷயங்கள் எதையும் அறிய முடியவில்லை. என்றாலும் அந்த முகமூடிக் கள்ளர் விஷயமும், துப்பாக்கி சத்தத்தின் பயங்கரமும் யாதாயிருக்கக்கூடும் என்ற எண்ணம் மட்டும் அவனை விட்டகலவே இல்லை. இதன் விபரீதம் யாதாகுமோ என்ற பெரும் பயத்தினால் தாயின் பக்கத்திலேயே உட்கார்ந்து விட்டான்.

இரண்டு நாட்கள் சென்றுவிட்டன. மூன்றாம் நாள் பிற்பகல் மோஹன் ஆரஞ்சுப் பழத்தை உரித்துத் தன் தாயாருக்குக் கொடுத்துக் கொண்டே இருக்கையில் தடதடவென்ற பூட்ஸ் கால்களின் ஓசை கேட்டது. மோஹன் டாக்டர்கள் வருகிறார்களோ வென்று உற்று கவனித்தான்.

இவன் எண்ணாததும் எண்ணி சஞ்சலப் பட்டுக்கொண்டிருந்ததற்கு ஒப்ப போலீஸ் இன்ஸ்பெக்டரும், ஜவான்களும் வெகு அட்டகாஸமாய் வருவதைப் பார்த்ததும் திடுக்கிட்டு எழுந்து பதறியவாறு நின்றான்.

இமை கொட்டும் நேரத்தில் அங்கு அவர்கள் நெருங்கி "மிஸ்டர்-மோஹன்! உங்களை கைதி செய்யும்படி இதோ அதிகாரிகளின் உத்திரவு வாரண்டு. தாங்கள் வேலையாகவிருந்த நாட்டின் நண்பன் பத்திரிகாலயத்து முதலாளியாகிய ஸ்ரீமான் தர்மலிங்கம் உம்முடைய துர் நடத்தையைக் கண்டித்து வேலையை விட்டு நீக்கிவிட்டதற்காக அவர் மீது க்ஷாத்திரங் கொண்டு அவர் பங்களாவிலேயே புகுந்து கொள்ளை யடித்ததோடு அவரையும் கொலை செய்துவிட்டதற்காக உம்மைக் கைது செய்கிறோம்.'' என்று இன்ஸ்பெக்டர் அட்டகாசமாய்க் கூறினர்.

இந்த இடியோசையைப் போன்றதும், எரிமலையே தன் தலையில் புரண்டு விழுந்துவிட்டது போன்றதுமான வார்த்தையைக் கேட்டதும் மோஹனனின் உயிர் தத்தளித்தது. "ஹா!...என்ன! என்ன! தர்மலிங்க ப்ரபுவை நானா கொலை செய்தேன்...தர்ம ப்ரபுவா.........

ஐயோ!.......தர்மலிங்கமா கொலை செய்யப் பட்டார்! ஹா! கடவுளே! இதென்ன சோதனை!" என்று கதிகலங்கி, ஸ்மரணையற்று வெட்டிச் சாய்த்த மரம்போல விழுந்தான். கண் உபாதை நீங்கி நிம்மதியாய் படுத்திருக்கும் கல்யாணியம்மாள் செவியில் இச் சொற்கள் பட்ட உடனே "ஹா...,மோஹன்! மோஹன்!......என்று கதறியபடியே அலற்றினள், என்னே பரிதாபம்...என்னே கோரக் காக்ஷி.....

14-வது அதிகாரம்.

முகமூடி மர்மம்—திகைத்திடும் படுகொலை

உலகத்தில் எத்தகையோராயினும் அந்தந்த சமயம் அவரவர்களின் பலாபலனுக் கேற்ப துன்பமும் கஷ்டமும் அனுபவிக்காத மனிதர்களில்லை. சிறிது துன்பமனுபவிப்பினும் மலைபோலத் தெரிவதுதான் அதன் சக்தி. இன்பம் மலைபோலவிருப்பினும் அளவே தெரியாது சிறிதுதான் அனுபவித்ததுபோலத் தோற்றுவது உலக வியல்பு.

நமது ராஜத்திற்கு ஆதி முதல் இதுபரியந்தம் ஒரு விதமான கஷ்டமும் இன்றி ஏதேச்சாதிகாரமாக விருந்ததெல்லாம் பெரிதாகத் தோன்றாமல் இப்போது சம்பவித்த இக் கஷ்டமும் அவமானமும் விசனமுமே பெரிய தலைச் சுமையாயும் வெகு நாட்களாகக் கஷ்டத்திலேயே தவிப்பதுபோலவும் தோன்றி அதைச் சகிக்கமாட்டாது புலம்பியபடியே வெளியில் படுத்திருந்தவள் அப்படியே வெகு நேரம் இருந்துவிட்டாள்.

அன்றிரவு சாப்பாட்டையும் அவள் விரும்பவில்லை. ஏதேதோ எண்ணியபடியே படுத்திருந்தாள். 9 மணிக்கு மேல் தன்னறைக்குச் சென்று படுத்துக்கொண்டாள். இரவு முற்றும் சரியான நித்திரையுங்

கொள்ளவில்லை. எந்த விதமாக மோஹனுக்கு உதவி புரிய முடியும் என்ற விஷயத்தைப் பற்றியே யோசித்துக்கொண்டிருந்தாள்.

விடியற்காலை தன்னை மறந்து ஆழ்ந்து நித்திரைபோய்விட்டாள். தர்மலிங்கத்திற்கு இந்த காரியாலயத்தைச் சேர்ந்தார்ப்போலுள்ள பெரிய பங்களாவைத் தவிர இதற்கு 5 மைலுக்கு அப்பால் பட்டிக்காடுமில்லாத பட்டினவாஸமுமில்லாத வேப்பம்பட்டி என்ற ஊரில் பெரிய கல்கோட்டையைப் போல ஒரு பங்களா உண்டு.

தர்மலிங்கம் அனேகமாக அந்த பங்களாவில்தான் தனது நிம்மதியான நேரங்களைக் கழிப்பதுடன், முக்கியமான பெரிய விஷயங்களைத் தீர்க்காலோசனை செய்து ஆநந்தமாய் நிச்சப்தமாக எழுதுவார். அவர் முக்கால் பங்கு தினங்களும் அதே இடத்தில் தான் தன் ஆரோக்யத்திற்காக மனைவி உயிருடனிருந்த வரையில் மனைவி சகிதமே இரவு நேரங்களில் படுக்கைக்குப் போய் விடுவார்.

மனைவியும் தன் பெற்றோர்களும் மறைந்த பின்னர் அவர் தன்னுடைய பெரும் பாகமான நேரத்தை ராஜத்துடனேயே இருந்து கழிக்கவாரம்பித்தார். எனினும் சில தினங்கள் அவ்விடத்திலும் படுத்துக்கொள்வார்.

ராஜத்துடன் அன்று பேசிவிட்டு ஓர் முக்கிய காரியமாய் வேப்பம்பட்டிக்குச் சென்றுவிட்டார். சந்தான க்ருஷ்ணனுக்கு தன் பிதா இங்கில்லாத நாளில் கொண்டாட்டம் இன்னும் அதிகமாகி விடும். தன் சகாக்கள் 10 பெயர்களுடன் இரவு முற்றும் சீட்டாடுவதும் குடிப்பதுமான லீலைகளை வீட்டிலேயே செய்ய ஆரம்பித்து விடுவான். அன்றிரவு 1 மணி வரையில் அவர்களுடைய அமர்க்களம் ஓயவில்லை. இரவு முற்றும் இவ்விதம் குதிப்பதும் விடிந்து வெகு நேரம்வரையில் நித்திரை செய்வதும் அவர்களின் வழக்கம்.

வழக்கம்போல சமயல்காரன் தர்மலிங்கத்திற்கு அதிகாலையில் காப்பியும் பலகாரமும் எடுத்துச் சென்றான். வேப்பம்பட்டி பங்களாவின் வாசற்கேட்டு உள் தாழ்ப்பாள்கூடப் போடாமலிருந்ததைக்

கண்டதும் சமயல்காரனுக்கு "ஏன் கதவு திறந்திருக்கிறது. காவலாளிகளில் எவனுவது எழுந்து வெளியில் போயிருப்பான்." என்று எண்ணியபடியே உள்ளே வந்தான்.

பங்களாவின் உள்பக்கத்துக் கதவும் சாத்தாமல் திறந்திருந்தது. முன் பக்கத்து தாழ்வாரத்தில் அங்கு காவல் புரியும் ராஜபாளேயத்து பெரிய வேட்டை நாய்கள் இரண்டும் இறந்துபோய் கிடந்தன. அவைகளின் பக்கத்தில் மாமிசத்துண்டுகள் இறை பட்டுக் கிடந்தன. அதைப் பார்த்தவுடனே சமயல்கார சங்கரனுக்கு ஏதோ ஒருமாதிரி திடுக்கிட்டது.

உடனே சற்று தைரியம் செய்துகொண்டு "அடேய் காத்தான்... அடேய்....இருளப்பா......முனியாண்டி!" என்று பாரா கொடுக்கும் ஒவ்வொருவருடைய பெயரைச் சொல்லியும் கூப்பிட்டுப் பார்த்தான். யாதொரு பலனுமே இல்லே. சங்கரனின் கலக்கம் அதிகரித்தது. கையிலிருந்த காப்பி பலகாரத்தை ஒரு புறம் வைத்து விட்டு உள்ளே சென்றுன்.

முன் கூப்பிட்ட மூன்று வேலேக்காரர்களும் உட்புறமுள்ள ஹாலில் மூலேக்கொருவராகப் படுத்திருந்தார்கள். இதைக் கண்ட சங்கரன் அவர்களின் அருகில் சென்று முன்போலக் கூவினுன். பதிலே இல்லே; புரட்டிப் புரட்டிப் பார்த்தான். அவர்களுடைய ச்வாசம்மட்டும் மெல்லியதாக வந்துகொண்டிருக்கிறதே யன்றி அசைத்து அசைத்துப் புரட்டினுலும் கண்ணேத் திறக்கவும் இல்லே. ஸ்மரணே இருப்பதாகவே தெரியவுமில்லே.

சங்கரனின் குழப்பமும் மன அதிர்ச்சியும் அதிகரித்து அவனே யறியாது பயமும் நடுக்கமும் சூழ்ந்துகொண்டு மார்பு படபடவென்று அடித்துக்கொள்கிறது. "ஏன் இவர்கள் இப்படிக் கிடக்கிருர்கள்..... எஜமான்! எஜமான்!" என்று கூவியபடியே அந்த ஹாலேத் தாண்டி அடுத்த ஹாலுக்குச் சென்றுன். பயத்தினல் தேகம் திடுக்கு திடுக்கு என்று தூக்கிப் போடுகிறது. ஏதோ இங்கு விபரீதந்தான் நடந்திருப்பதாக நன்கு தெரிந்துவிட்டது...

எஜமான் அறைக்குச் செல்லும் முன்பக்கத்து ஹாலில் செல்கையில் அங்குள்ள கோரமான காக்ஷியைப் பார்த்ததும் "ஹா!" என்று திடுதிடுத்துத் தள்ளினன். "ஹா! எஜமான்! எஜமான்!" என்று கதறினன். சில நிமிடம் பதுமையைப்போலானன். அருகில் வரவும் பயந்து நடுங்கினன்.

தர்மலிங்கம் அலங்கோலமாய்க் கீழே விழுந்து கிடக்கிறன். ரத்தம் ஆறு போல ஓடி சட்டை, வேஷ்டி முதலியன நனைந்து தோய்ந்து கிடக்கும் கோரக்காட்சியைக் கண்டு யாரால்தான் சகிக்க முடியும்? சங்கரன் நெருப்பை மிதித்தவன்போலத் தத்தளித்தபடியே அருகிலும் வரமாட்டாது, வெளியிலும் போக முடியாது ப்ரமை பிடித்தவன் போலாகிவிட்டான்.

பேசவும் நா தழதழத்து விட்டது. முன்னே வைத்த காலைப் பின்னே வைத்துக்கொண்டு வீதியில் ஓடி வந்து "கொலை! கொலை... கோரமான கொலை! இந்த பங்களாவில் விபரீதமான கொலை நடந்திருக்கிறது. வாருங்களேன். போலீஸுக்குத் தகவல் கொடுங்களேன். ஐயோ.........தர்மலிங்க ப்ரபு மாண்டுக் கிடக்கிறர்'' என்று கண்ணீர் பெருகத் துக்கத்துடன் தன்னை மீறிக் கூச்சலிட்டான்.

சங்கரன் வெகு நாட்களாக இவர்களிடமே சமயல் வேலை செய்து வருவதால் இவர்களிடம் அளவற்ற ப்ரீதியும் நம்பிக்கையும் உண்டாகி இவர்களையே தனது சொந்த மனிதர்கள் போலப்பாவித்து, சரணுகதி என்று வீட்டுடன் கிடப்பவன். இவனுடைய மனைவி மரகதம் ராஜத்திற்கு வேண்டிய வேலைகளைச் செய்வதும், இன்னும் மற்ற காரியத்தைப் பார்ப்பதுமாக இவர்கள் வீட்டிலேயே சிறு குடிசையில் தம்பதிகள் இருந்து வருகிருர்கள். ஆதலால் சங்கரனுக்குண்டான துக்கத்திற்கு அளவே இல்லை.

வீதியில் கூச்சலிட்ட மாத்திரத்தில் நூற்றுக் கணக்கில் கூட்டம் கூடி "என்ன! என்ன! என்ன விபரீதம் நடந்தது! தர்மலிங்கமா கொலை செய்யப்பட்டார்........என்ன அனியாயம்! என்ன கொடுமை......என்று பற் பல விதமான தொனிகளும் வார்த்தைகளும் எழுந்தன.

வேப்பம்பட்டிக்கு மூன்று மைலுக்கு அப்பாலுள்ள கந்தன் சாவடியில்தான் போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது; ஆகையினால் ஒரு ஆள் சைகிலில் ஓடினான். சிறிது நேரத்திற்கெல்லாம் இன்ஸ்பெக்டர், சேவகர்கள் முதலிய எல்லோரும் ஒரு லாரிநிறைய வந்து விட்டார்கள்.

சங்கரனின் நிலைமையைக் கூறத்திறமே அன்று. வேறொரு ஆளை இதற்குள் தர்மலிங்கத்தின் காரியாலயத்திற்கும் வீட்டிற்கு மனுப்பி விஷயத்தைக் கூறி அவர்கள் யாவரையும் அழைத்து வரும் படிக் கூறினான். அந்த மனிதன் காத்து வேகமாகப் பறந்து வந்து சேர்ந்தான்

ராஜம் அதிகாலையில் படுக்கையை விட்டு எழுந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தாள். கிருஷ்ணனும் அவனுடைய சகாக்களும் குறட்டையில் போட்டி போட்டுக்கொண்டு தூங்குகிறார்கள். வந்த மனிதன் இந்த பயங்கரமானதும் துக்ககரமானதுமான விஷயத்தை எப்படிக் கூறுவது என்று தவித்தவாறு ராஜத்தின் அறையருகில் வந்து "அம்மணீ! ஐயோ! நான் என்னென்று கூறுவேன்? தர்மப்பிரபு......கருணை வள்ளலை, உத்தம மூர்த்தியான உங்கள் பிதாவை யாரோ கொலை செய்து விட்டார்கள். வேப்பம் பட்டியே அலங்கோலமாயிருக்கிறது வாருங்கள்."

என்று அவன் கூறிய வார்த்தைகளைக் கேட்ட ராஜம் "ஹா! ஐயோ! என்ன! என்ன! கொலையா! என் பிதாவையா! ஐயோ! கடவுளே!" என்று கதிகலங்கி மூர்ச்சையாகிவிட்டாள். கிருஷ்ணனுக்கு விஷயத்தைக் கூறியதும் அவனும் துடி துடித்துக் கதறியவாறு எழுந்து ஓடி வந்தான்.

மரகதத்தினால் ராஜத்திற்கு மூர்ச்சை தெளியவைத்து எல்லோரும் கதறிய வண்ணம் வேப்பம்பட்டிக்கு வந்து சேர்ந்தார்கள். இதற்குள் போலீஸ்காரர்கள் வீதியில் கூடியுள்ள ஆயிரக்கணக்கான கூட்டத்தை விலக்கிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் உள்ளே சென்று அந்த அலங்கோலக் காக்ஷிகளைக் காணச் சகியாது ராஜம் தன் பிதாவின்மீது விழுந்து "அப்பா! என்னருமை அப்பா!

இதென்ன கோர சம்பவம் நமக்கு பாக்கி இருந்தது.......என்னைப் பரதேசியாக்கி விட்டுச் சென்று விட்டீர்களே! அப்பா!......... நான் இனி என் செய்வேன்? எந்த பாதகன் தங்களை இப்படிச் செய்ய காம் வைத்துக் காத்திருந்தானோ தெரியவில்லையே.....என்று கதறிக் கதறி மூர்ச்சித்தாள்.

தர்மலிங்கத்தின் படுக்கை யறையுடன் சேர்ந்தாற் போலுள்ள அறையில் இருந்த இரும்புப் பெட்டி திறந்திருந்ததோடு தாறுமாருக அதனுள்ளிருந்த ரிகார்டுகளும் காகிதங்களும் இரைபட்டுக் கிடந்தன. அவைகளைக் கண்ட போலீஸார் எல்லாவற்றையும் ஆராய்ச்சி செய்யத் தொடங்கினர்கள்.

இதற்குள் டாக்டர் ப்ரேத சோதனைக்கு வந்துவிட்டார். தர்மலிங்கத்தின்மீது விழுந்து கதறி மூர்ச்சையாகிய ராஜத்தை மூர்ச்சை தெளியவைத்துத் தேற்றினர்கள். சங்கரனின் மனைவி ராஜத்தை அணைத்துக் கொண்டு தேறுதல்கள் கூறினள்.

க்ருஷ்ணனுக்கு உண்மையில் பிதா இறந்து விட்ட துக்கம் ஒரு புறமிருக்க, யார் கொலை செய்திருப்பார்கள் என்கிற விஷயத்திலேயே மனம் தாவித் தவிக்கின்றது. அதிகாரிகளுடன் கலந்துகொண்டு அதையே அறிய ஆவலுள்ளவனுன்.

டாக்டர் ப்ரேத சோதனை செய்ததில் "இவர் முதல் நாள் இரவு சுமார் 12 மணிக்கு முன் இறந்திருப்பதாகத் தெரிகிறது. இதயம் வெகு வேகமாகச் சுழன்று திடீரென்று நின்றிருக்கிறது. அதாவது இவர் இங்கு வந்த திருடர்களைப் பார்த்து நடுங்கி பதறிப்போய் அவர்களைப் பிடிக்கப் போகும் சமயம் அவர்கள் எதிர்பாராமல் சுட்டிருக்கவேண்டும் என்று தான் யூகிக்க இடமிருக்கிறது. இவர் படுக்கையில் இந்த இடம் வரையில் ஓடிவந்திருக்க வேண்டும். ஏனெனில் போர்வை காலில் சுற்றிக்கொண்டு இதுவரை இழுத்துக் கொண்டு வந்திருக்கிறது. அதோடு இவர் பக்கத்துத் தலையணையும் கீழே விழுந்திருக்கிறது. ஆகையினல் இவர் படுக்கையிலிருக்கையில் சப்தம் கேட்டு எழுந்து அவர்களைப் பிடிக்க வந்த வேகத்தில் இவைகள் தடுமாறி இருக்கின்றன. அதே சமயத்தில் கொலை செய்யப்பட்டிருக்கிறது." என்று சாட்சியம் கொடுத்துவிட்டார்.

பிறகு அங்கு கிடக்கும் வேலைக்காரர்கள் மூன்று பெயர்களை யும் சோதித்ததில் "சுமார் 12 மணி நேரம் வரையில் வேலை செய்யக் கூடிய மயக்க மருந்தை ஏதோ ஒரு பான வகையில் இவர்களுக்குச் செலுத்தப்பட்டிருக்கிறது. அளவு மீறிவிட்டதால் இம்மாதிரி கிடக்கிறார்கள். ப்ராண பயமில்லை.'' என்று ரத்தத்தைப் பரிசோதித் துக் கூறிவிட்டார்.

நாய்களையும், அவற்றைச் சுற்றியுமுள்ள மாமிசத் துண்டுகளை யும் கவனித்ததில் நாய்களைக் கொன்று விடுவதற்கு மாமிசத்தில் பாஷாணத்தைக் கலந்து கொடுத்திருப்பதால் ஒரு துண்டைத் தின்ற தும் நாய்கள் இறந்துவிட்டன. இந்த குறிகளை எல்லாம் பார்த்தால் யாரோ உளவறிந்த கள்ளனே முன் ஜாக்கிரதைகளுடன் வெகு சாமர்த்தியமாய்ச் செய்திருப்பதாகத் தெரிகிறது. இதற்குமேல் இதை விசாரணை செய்து ஆராய்ந்து கண்டு பிடிப்பது போலீஸாரின் வேலைகளாகும்.'' என்று கூறினர்

ராஜம் புழுபோலத் தவிக்கிறாள். போலீஸ் இன்ஸ்பெக்டர் வாக்கு மூலம் ஒவ்வொருவரிடமாய் வாங்கி புத்தகத்தில் பதிவு செய்து கொண்டார். ராஜத்தினிடம் வந்தார். "அம்மணீ! இனி கதறிப் பயன் யாது? இவ்விதம் செய்த கொலைப்பாதகனைக் கண்டு பிடித்துப் பழி வாங்கவேண்டுவதுதான் உங்கள் முதல் காரியம். என்ன செய்யலாம்? அம்மா! உங்கள் பிதாவை நேற்று கடைசியாக எப்போது பார்த்தீர்கள்?'' என்றார்.

ராஜம்:—ஐயா! நான் கதறாமல் என்ன செய்வேன்? என் உயிரினும் இனிய பிதாவை இந்த கோரமான நிலைமையில் பார்க்க என் மனம் பற்றி எரிகிறதே......ஐயோ!...என் தந்தையை நான் இக்கதியில் பார்ப்பேன் என்று கனவிலும் கருதவில்லையே. ஐயோ!... நேற்று இரவு 8-மணி சுமாருக்கு என்னிடம் ஏதோ என் விவாக விஷயமாய்ப் பேசினர். அப்போதுதான் கடைசியாய்ப் பார்த்தேன். இதற்குள் இம்மாதிரி ஆய்விட்டதே...

இன்ஸ்:—அம்மா! உங்கள் பிதாவுக்கு விரோதிகள் யாரேனும் உங்களுக்குத் தெரிந்து உண்டா!

ராஜம் :—ஐயா! அவருடைய குண ப்ரதாபம் உலகமே அறியுமே. நீங்களறியவில்லையா! என் பிதாவுக்கு விரோதமான ஒரு புல், பூண்டு கூடக் கிடையாது. தர்ம ப்ரபுவாய் எல்லோருக்கும் திலகமாக வன்றோ விளங்கினர். அவரைக் கொலை செய்யவேண்டி எந்த பாதகன் தோன்றினனே தெரியவில்லையே......

இன்ஸ் :—அம்மா! பண விஷயத்தில் லேவாதேவிகள் செய்யும் வழக்கம் உண்டா! அந்த மூலமாக யாரேனும் விரோதிகள் உண்டா!

ராஜம் :—ஐயா! என் பிதா லேவாதேவி செய்யும் வழக்கமே கிடையாது. நிரம்பவும் தெரிந்தவர்களுக்கு சமயா சமயங்களில் தானே தாராளமாக உதவி புரிவார். அப் பொருளை திரும்பிக் கேட்கவே மாட்டார். அவர்களாகக் கொடுத்தால் வாங்கிக்கொள்வார். இல்லையேல் அதைப்பற்றி நினைக்கக் கூடமாட்டார். பணத்தை பாங்கியில்தான் வைத்து வைப்பார். வீட்டில்கூட வைக்கமாட்டார்.

உடனே இன்ஸ்பெக்டர் இரும்புப் பெட்டி யருகில் சென்று தர்மலிங்கத்தின் பாங்கு புத்தகங்களைப் பார்த்தார். சமீபத்தில் ஒரு வாரமாக பெருந்தொகை எதுவும் பாங்கில் கட்டவில்லை என்று தெரிந்தது. அவருடைய வரவு செலவு புத்தகத்தைப் பரிசோதித்ததில் இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பு இவருக்கு வரவேண்டிய வெளியூர் ஏஜெண்டுகளின் மூலமாக சுமார் 5000 ரூபாயிக்குமேல் வரவு கண்டிருந்தது. அதோடு இவருடைய க்ராமத்திலிருந்து தானியங்களை விற்று சுமார் 3000 ரூபாய்கள் ஆள் நேரில் கொடுத்திருப்பதும் வரவில் கண்டிருந்தது. அதைத்தவிர வந்த பணங்கள் யாவும் கணக்குப்படி முதல்தினம் தேதிப்படிக்கு அவர் கையினலேயே சுமார் 10000 ரூபாயிக்கு வரவு காட்டி எழுதி இருந்தது.

"இத்தனை பெரிய தொகையை ஏன் பாங்கியில் உடனே கட்டாது வீட்டில் வைத்திருந்தார்." என்று இன்ஸ்பெக்டர் கேட்டா உடனே ராஜம் "ஐயா! உத்யோகஸ்தர்களாகிய உங்களுக்குமா மறந்து விட்டது. இப்போது பாங்கிகளுக்கு சேர்ந்தார்ப் போல நான்கு தினங்களுக்கு லீவு இல்லையா! நாளைதான் பாங்கி திறப்பார்கள். நாளை கட்டலாமென்று வைத்திருந்திருக்கலாம்" என்றாள்.

இதற்குள் இரும்புப் பெட்டி முழுதும் சோதனை செய்து பார்த்தும் பணம் ஒரு சல்லி கூட அதில் காணப்படவில்லை. இந்த பணம் பெட்டியிலிருப்பது தெரிந்துதான் திருடன் வந்து, இதைக் கொள்ளையடிப்பதைப் பார்த்துவிட்ட அதே சமயம் சுட்டுவிட்டான்; இப்போது நன்றாக விளங்கிவிட்டது. அக்கள்ளனை வெகு எளிதாகப் பிடித்துவிடலாம்.'' என்று இன்ஸ்பெக்ட்டர் அபாரமான சந்தோஷத்துடன் கூறினர்

க்ருஷ்ணனைத் தனியே வாக்கு மூலம் கேட்டார்கள். க்ருஷ்ணனும், தன் பிதாவுக்கு யாரும் விரோதிகளே இல்லை என்றும், காரியாலயத்தில் வேலை செய்த மோஹன் என்றவனை அவன் நடத்தை சரி இல்லாததால் வேலையை விட்டுத் தள்ளிவிட்டார் அவ்வளவுதான். மற்றபடி அவனிடங்கூட விரோதமும் கடும்பகையும் கிடையாது. அவனும் அன்று போய் விட்டவன் ஒரு ஜோலிக்கும் வரவில்லை என்றும் சொன்னன.

நாகலிங்கத்தை வாக்குமூலம் கேட்டதற்கு அவனும் அதே மாதிரி கூறிவிட்டான். மற்றவர்களையும் விசாரித்துக் கொண்டார்கள். இதற்குள் மணி பதினொன்று ஆகிவிட்டது. அந்த வேலையாட்களுக்கு மயக்கம் சற்று தெளிவு உண்டாகியது. மூவரும் குடிகாரர்கள்போல ஆடி விழுந்து ஒருவர் பின் ஒருவராகக் கண்ணை விழித்தார்கள். "அடேய்! இதென்னடா தூக்கம். இப்படி தூங்கிப்பூட்டோமே! யப்பாடா! வெய்யிலே பாத்தியா! ஐயோ! எசமான் என்ன நெனச்சிக்கிண்ணுரோ.........என்று கூறியபடிச் சுற்று முற்றும் பார்த்தார்கள்.

அங்கு ஜனங்களின் கூட்டமும், அலங்கோலமும், போலீஸார் நிற்பதும் பார்த்து யம்மாடீ! "ஐயயோ.........போலீஸ்காரங்க நிற்கிறுங்களே.........ஐயோ!......என்று பயந்து அலற்றி அடித்துக் கொண்டு எழுந்து, விழித்தார்கள்.

இன்ஸ் :—டேய்! நில்லுங்கடா! என்னடா விழிக்கிறீங்க? மணி
12 அடிக்கப் போகிறது என்னடா இன்னேரம் தூக்கம்? இரவு எப்

படா படுத்தீர்கள்........அதோ பார்.....உங்கள் எஜமானரை யார் கொலை செய்தது—என்றார்.

இந்த வார்த்தை காதில் விழுந்ததும் நெருப்பை மிதித்தவர்கள் போல துள்ளித் தவித்து "ஐயையோ! ஐயயோ! என்ன! என்ன... எஜமானரைக் கொலை செஞ்சுப்புட்டாங்களா! யம்மாடீ! யப்பாடீ! தர்ம ப்ரபுவாச்சே இதென்ன அக்கறம்பு. இதென்ன அனீதம்!" என்று கத்திக்கொண்டே சவத்தருகில் வந்து அடித்துக்கொண்டு கதறுகிறார்கள்.

ஐயயோ! தர்மராசாவே!...இதென்ன கண்ராவி. எந்த கொலெ பாதகன் ஒன்னெ கொண்ணுப்புட்டான். எந்த நாசமாய்ப் போன வன் ஒண்ணெக் கொண்ணுப்புட்டான். ஐயயோ! ராத்திரி ராஜா மாதிரி வந்து படுத்துகிணிங்களே! ராத்திரி இந்த ஏயெ வேலக்கார நாயிங்ககிட்டெ கொள்ளே பேச்சு பேசினீங்களே! இந்த கயிதெக்கி ஒரு பொண்ணு பாத்து கண்ணாலங் கட்டி வக்கரேண்டா...இண்ணு சிரிச்சிகிணே சொன்னீங்களே! இந்தப் பாவி அதிஷ்டமா பதராப் பூட்டுது...எஜமான்...எஜமான்! ஐயோ!...கொயங்தே கத்துதே... இன்னம்மா புயுவா துடிக்குதே........ஐயயோ! சாமீ! இதென்ன அக்குரும்பு"..... என்று துக்கம் தாங்கமாட்டாது உண்மையிலேயே கதறி முட்டிக்கொண்டார்கள்.

இன்ஸ்பெக்டர் அவர்களைச் சமாதானம் செய்து "ஏண்டா!... ராத்திரி எஜமான் எத்தனை மணிக்கு வந்தாரு. நீங்கள் எப்போ படுத்தீர்கள்? ஏன் 11-மணி வரையில் தூங்கினீர்கள்? இங்கு நேற்று யார் வந்தார்கள்? விவரங்களை ஒன்றுவிடாமலும் சற்றும் பயப் படாமலும் கூறுங்கள்" என்றார்.

வேலு:—ஐயா! நாங்க வயக்கம் போல வேலெ எல்லாஞ் செஞ் சிப் புட்டுப் பேசிகிட்டே இருக்கச்செ ஐயா வந்தாரு. ஐயாகூட வயக்கமா வர்ர மானேஜர் ஐயாதான் வந்தாரு. அவரு செத்தெ நேரம் பேசிட்டு பூட்டாரு. ஐயா எங்களோடே ரொம்ப இஷ்டமா பேசுவாங்க. எங்கப்பன்போல இருப்பாரு. எங்களெ பாத்து 'இருங்

டா! இவனுக்குக் கண்ணளம் கட்டிப் புட்றேன்' இண்ணுகூட மகாராஜா! தர்ம ப்ரபு சொன்னரு.

சாமி! அவரு உள்ளாரெ படுத்துக்கப் பூட்டாரு. அப்ரம் நாங்க சாப்புட்டேட்டு வந்து படுத்திக்கிணேம். படுக்கறத்துக்குள் எறவே ஏதோ மழக்கம் வராப்பேல தூக்கம் வந்திடுச்சி. அப்படியே தூங்கிப்பூட்டோம்பேலகீது. எங்க படுக்கெகூட போட்டுக்கலே....... ஆம்......இப்பதான் காபகம் வரது. நேத்து ராத்திரி கேட்டுகூட பூட்டலிங்க. மழக்கம் மழக்கமா சுத்தி அடிச்சுதுங்க....

இன்ஸ் :—(இடைமறித்து) ஏண்டா மயக்கம் வந்தது. குடிப் பழக்கம் உண்டா! எல்லோரும் அதிகமாகப் போட்டுவிட்டீர்களா...

வேலே :...ஐயயோ! ஐயயோ!......சாமீ! அப்பிடி சொல்லாதீங்க சாமி. குடிகாரக்கபிதையா இருந்தாகூட இந்த தருமராசா கிட்ட வந்தா கெட்ட பயக்கம் ஒடி பூடுமே......நாங்க எத்தனேயோ வருசமா இந்த மவாராசா கிட்ட கெடக்கிர நாயிங்களாச்சே. எங்களுக்கு அதெல்லாம் ஒரு கெட்ட வயக்கங் கெடையாதுங்க அல்லாம் இந்த புண்ணியவானலேதாங்க நாங்க சீராக்கிறேம்.

எங்களுக்கு ரெண்டுநாளா ஒடம்பு வாழ்வு மாதிரி நோவும் கடுப்புமா இருந்திடுச்சுங்க. அதோடு பித்தமா ஒரு மாதிரி பசி எடுக்காமே இருந்திச்சுங்க. அத்தே எஜமாங்கிட்டே சொன்னேங்க. அவரு அல்லாந் தெரிஞ்சவராச்சே. சுக்கு, மொளவு, பெருங்காயம் திப்பிலி இதெல்லாம் வச்சி தொவயல் செய்யச்சொன்னரு. வேப்பம் பூ ரசம் நெறய வச்சிக்கச் சொன்னரு. தொவையலும் ரசமும் சாப்பாட்டுலே சாப்புட்டேட்டு ரஸத்தெ ஒரு சோட்தாலே குடிச்சி புடுங்க. காலெலெ எந்திருக்கச்சே ஒடம்பு கலகலன்னு இருக்கும். ரெண்டுதரம் பேதியாவும். வாழ்வும் பித்தமும் ரவெ கொறஞ்சு பூடும். அப்பறம் பாக்கலாம் இண்ணருசாமி.

நாங்க அப்படியே ராத்திரி செஞ்சு குடிச்சோம். நல்லா இந்திச்சு. குடிச்ச ரவ நேரத்துக்கெல்லாம் இண்ணமோபோல மழக்கம் வந்திது. இங்கே குந்திக்கிட்டு பேசிக்கிட்டே இருந்தோம் அப்பறம் ஒண்ணுமே தெரியாதுங்க. சத்தியமா இதாஞ்சாமி தெரியும்.'' என்று கூறி, கண்ணீர் விட்டுக் கதறினர்கள்.

உடனே இன்ஸ்பெக்டர் "ஏண்டா! நீங்கள் குடித்த ரசம் மிச்ச மிருக்கிறதா!" என்றார். "ஓ! காத்தாலேக்கி வச்சிருக்கிறோம் சாமி" என்றார்கள். உடனே அவர்களையும் டாக்டரையும் அழைத்துக் கொண்டு போய் ரசத்தைப் பரிசோதித்தார்.

ஏற்கெனவே டாக்டர் கூறியபடி ரசத்தில் மயக்க மருந்து கலந்திருப்பதை விளக்கிக் காட்டிவிட்டார். இதைக் கண்ட வேலைக்காரர்கள் நடு நடுங்கிப்போய் அலறினார்கள்.

இன்ஸ் :—ஏண்டா! உங்கள் ரசத்தில் மயக்க மருந்து எப்படி வந்தது? நீங்கள் சமயல் செய்த பிறகு இதை யார் வந்து பார்த்தார்கள். இங்கு யாராவது வந்தார்களா!

வேலை :—ஐயயோ! நாங்க ஒரு பாவமும் அறியமாட்டங்களே. அடிக்கடி நாங்க சமயல் செய்யரத்தை பெரிய எஜமான், சின்ன எஜமான், எஜமானியம்மா கூடத்தான் வேடிக்கையா வந்து பாப்பாங்க. "ஏண்டா எத்தினி ஆடு துண்ணே? எத்தினி மீனு கரி பண்ணே? எத்தினி மாடு அடிச்சே?" இண்ணு கேலி பண்ணுவாங்க. அதுபோல நேத்திக்கும் மானேஜரு, சின்ன எஜமான், சின்ன எஜமான் சினேகிதக் காருங்க அல்லாரும் சாயிந்திரமே வந்து எங்களே கோட்டாப் பண்ணுங்க. பின்னே யாரும் ஒரு காக்கா கூட வல்லிங்களே.........சாமி......மயக்கமா போட்டிருக்குதுங்க...... ஐயயோ! இதென்ன அக்குரும்புங்க......என்று கூறிக் கூறி மாய்ந்து விட்டார்கள்.

உடனே இன்ஸ்பெக்டர் "நாகலிங்கம், க்ருஷ்ணன், அவன் சினேகிதர்கள் மூவரும் வந்தது உண்மையா?" வென்று கேட்டார். "ஆமாம். நாங்கள் எப்போதும் இந்த பெரிய மைதானத்தில் பந்தாட வருவோம் அப்போது வந்தோம். இது இன்று புதிதல்லவே," என்றார்கள்.

பிறகு இன்ஸ்பெக்டர் வேலையாளை நோக்கி "எஜமானர் படுக்கையறைக்குப் போகும் முன்னர் நீ வீடு முற்றும் பார்த்தாயா. அப்போது யாராவது இருந்தார்களா?" என்றார்.

வேலே :—நான்தான் சாமி படுக்கெ போட்டேன். எஜமான் ஏதோ எயிதிக்கிணே இருந்தாரு. பக்கத்துலே ஒரு கட்டு நோட்டு வச்சிருந்துதுங்க. அதெல்லாம் எண்ணிக்கிட்டே இருந்தாரு. இது மாதிரி அவுரு அடிக்கடி எண்ணுவாரு. அப்படித்தான் நேத்து ராவுலேயும் செஞ்சாரு. நாங்க மழக்கத்தாலே அப்படியே உயிந்துப் பூட்டமே. அப்பறம் ஒண்ணுமே தெரியாதுங்களே இப்ப தானே கண்ணு மூயிச்சோம்.........ஐயோ...... ......எஜமானே.......... என்று உண்மையாகக் கண்ணீர் விட்டுக் கலங்கினர்கள்.

அவர்கள் வாக்குமூலத்தையும் பதிவு செய்துகொண்டு வீடு முற்றும் சோதனை செய்தார்கள். க்ருஷ்ணன் போலீசாரை நோக்கி "ஐயா! இதெப்படி தீர்மானிக்கப் போகிறீர்கள்? என் பிதாவைக் கொலை செய்த கொலைப் பாதகனைக் கண்டு என்று பழி தீர்க்கப் போகிறீர்கள்?" என்றான்.

இன்ஸ் :—ஐயா! நாங்கள் என்ன செய்வது? இது வரையில் ஆராய்ச்சி செய்ததில் பணத்தைத்தான் ப்ரதானமாகத் திருட வந்த தாயும் அச்சமயம் இவர் பார்த்து விட்டதால் சுட்டுவிட்டதாயுந் தான் யூகிக்க இடம் உண்டாகிறது. உங்களுக்கோ விரோதிகளே யாருமில்லை என்கிறீர்கள். வேலையை விட்டுத் தள்ளிய ஆசாமியின் மீது உங்களுடைய அபிப்ராயமென்ன?

க்ருஷ்:—எனது அபிப்ராயத்தைக் கூறி பயன் யாது? என் பிதா யாரையும் நம்பி விடுவார். எல்லோரையும் நேசிப்பார். ஆனல் அந்த மனிதனின் நடத்தை மட்டும் அவருக்குப் பிடிக்காததால் கண்டித்துத் துரத்தி விட்டார். அவர் அதற்குமேல் அவனைப்பற்றி சற்றும் எண்ணவில்லை. ஐயா! அவன் உள்ளுக்குள்ளே காரம் வைத்திருந்து ஏன் இம்மாதிரி செய்திருக்கக் கூடாது என்றுதான் என் மனத்தில் தோன்றுகின்றது. அவன் காரியாலயத்தில் வேலைக்கு வந்த நாளாக காரியாலயத்தின் கவுரவத்தையே குறைக்கத் தொடங்கினன். விவரங் கூற நான் ப்ரியப்படவில்லை.

இன்ஸ் :—அப்படியாயின் அவன்மீது சந்தேகம் உண்டாகிறதா? ஒரு விதத்திலும் அவனைப்பற்றி இங்கு சம்சயமாக இல்லா

திருக்கையில் அவனை எப்படிக் கைது செய்ய முடியும்? அது சட்ட மில்லையே! உங்களுக்கு அவன்மீதுதான் சந்தேகமென்று உறுதி யாகக் கூறினால் அவனைப் பற்றி நாங்கள் விசாரித்து நடவடிக்கை எடுத்துக்கொள்வது கிரமம்.

க்ருஷ்:—இருக்கும் விஷயம் இதுதான்.எனக்கு அவன் மீது தான் சந்தேகம். நீங்கள் விசாரித்துப் புலன் கண்டு பிடியுங்கள்.

இன்ஸ்:—(ராஜத்தினிடம் வந்து விஷயத்தைக் கூறி) அம் மணி! உங்கள் சகோதரர் இப்படித் தெரிவிக்கின்றார். உங்கள் அபிப்ராய மென்ன? அவர் மீது சந்தேகங் கொள்ள இடமிருக் கிறது உண்மைதானே. அவரைக் கைது செய்யலாமா......

ராஜம்:—(திடுக்கிட்டு அலறியவாறு) ஹா......என்ன! என்ன! மோஹன்மீது சந்தேகிப்பதா! அவர் கொலை செய்திருப்பாரா! அவர் கொள்ளை யடித்திருப்பாரா! இது சுத்த பிசகு. அவர் மீது சந்தேகிப்பது நெருப்பின்மீது ஈ மொய்ப்பது போலத்தானாகும். ஐயா! என் பிதா அவரை அனாவசியமாய், பிறருடைய தூண்டுதலால் சந்தேகித்து வேலையை விட்டு அநியாயமாகத் துரத்திய போதிலும் அவர் அதைச் சற்றும் பாராட்டவே இல்லை. அந்த விஷயம் எனக் குத் தெரியும். அநியாயமாய் அவர் மீது பழி சுமத்த நான் தயாராக இல்லை. அவர் பரம யோக்கியர், உத்தமர் என்று, தன் மனத்திற் குள்ளிருக்கும் ஆர்வத்தை இடம், சமயம் இரண்டையுங் கூட மறந்து ஆத்திரத்துடன் கூறிவிட்டாள்.

அந்த இன்ஸ்பெக்டர் மகா உத்தமர். வெகு யோக்யமான முறையில் ஒழுங்காக நடந்து அதிகாரிகளிடத்தில் அளப்பரிய மதிப்பும் கீர்த்தியும் பெற்றவர். சிலரைப்போல தீய பழக்கங்களோ, அன்றி அல்ப புத்தியோ, அதிகார தோரணையுடன் கீழ்ப்பட்ட சிப் பந்திகளையும் இம்சிப்பதோ அவரிடம் கிடையாது. மிக்க குணவந்தர். தன் வேலையில் புலி என்றால் புலி போன்றவரேயாகும். அவருடைய உத்யோக முறையின் ஒழுங்கு எல்லோரையும் ப்ரமிக்கச் செய்யும். எந்த வழக்கையும் தீர விசாரியாது அரைகுறையாகச் செய்யவே மாட்டார்.

அத்தகைய மனிதருக்கு ராஜம் கூறிய உணர்ச்சி ததும்பிய வார்த்தைகளின் கருத்து ஒரு நொடியில் விளங்கிவிட்டது. அவளுடைய இதயத்திலிருந்து வரும் ஆர்வமான தொனியும், பார்வையும் களங்கமற்று உண்மையை விளக்கிக் காட்டுவதாயிருந்ததால் அவர் என்ன செய்ய முடியும்?

"அம்மா! நான் உன் மொழியைக் கேட்டுச் சற்று கலக்கமே அடைகின்றேன். உன் சகோதரனுக்கும் அம்மனிதனுக்கும் பகை ஏதேனும் உண்டா!" என்றார்.

ராஜம்:—ஐயா! என் தந்தைக்கு எப்படி பகைவர்களே இல்லையோ, அதே போல அந்த ஏழை மனிதனுக்கும் பகைவர்களிருக்க இடமே இல்லை. என் தமையன் வேண்டுமாயின் அவர் மீது மூடத்தனமாய் பகை பாராட்டுவதாகவும் நானறிவேன். அவன் வார்த்தையைக் கொண்டு நீங்கள் ஓர் நிரபராதியின் மீது சந்தேகித்தால் அது வீணாகி முடியும். அவர் மீது எனக்கு ஒரு எள்ளத்தனையும் சந்தேகமில்லை. விதியின் கூத்து இம்மாதிரி எல்லாம் முடிந்துள்ளது— என்றாள்.

இம்மாதிரி மோஹன் மீது பழி உண்டாக்கிப் பேசியதைக் கேட்டதும் அவள் உள்ளம் துடித்தது. தந்தை இறந்த துக்கமும் மோஹன் கதி என்ன ஆகுமோ என்கிற அபாரமாய்ப் பொங்கும் விசனமும் ஒன்று கூடி ராஜத்தைக் கலக்கிவிட்டன. அவள் நிலைமை முற்றிலும் மாறி தத்தளித் துருகுகின்றது. என்ன செய்வாள் பேதைப் பெண்! அனியாயக் கொலைக்கு அழுவதா! அக்ரமப் பழி போட எண்ணியதற்குப் புலம்புவதா! அலைகாற்றிலகப்பட்ட நிலையற்ற படகு போலத் தவித்து சோர்ந்து விட்டாள்.

குறிப்பு:—120-வது பக்கத்திலுள்ள படத்தில், பயந்து பதைபதைத்து நிற்கும் மோஹனும் முகமூடியணிந்திருப்பதாகப் படம் எழுதியவர் தவறுதலாக எழுதியுள்ளதைக் கவனிக்க அவகாசமில்லாது நாம் பிரசுரித்துவிட்டதை வாசகர்கள் மன்னிப்பார்களாக.

15-வது அதிகாரம்

பதவியின் ஆட்சி—பரிதாபக் காட்சி

உலகத்தில் மக்களுக்கு விஷயம் கிடைக்கா விட்டாலும் எதையோ ஒன்றை வைத்துக்கொண்டு அதற்கு கண், மூக்கு வைத்து உருவமாக்கி வம்பு பேசும் சுபாவம் பெரும்பாலோரிடத்தில் நிறைந்திருக்கையில் திடீரென்று அகாரணமாய் ஓர் தர்மப்ரபுவைக் கொலை செய்திருக்கிறதென்ற செய்தியொன்று கிடைத்திருக்கையில் பொது மக்கள்தான் அதை விடுவார்களா! அன்றி போலீஸார்தான் விடுவார்களா.

பலபேர் பல மாதிரியாக பேசிக்கொள்ள வாரம்பித்தார்கள். போலீஸாரும் தமக்குக் கிடைத்த சரியான வேட்டையை நன்றாக ஆடத் தொடங்கினர். உதவி சூபரின்டென்டெண்டுக்கு இந்த வழக்கில் தாம் குற்றவாளியைக் கண்டுபிடித்து தூக்கிலிட்டு விட்டால் தம்மை அதிகாரிகள் உயர்ந்த பதவிக்கு மாத்திவிடுவார்கள் என்ற பெரிய நம்பிக்கையும் சந்தோஷமும் உண்டாகியதால் இன்ஸ்பெக்டர் ஏகாம்பரம் ராஜத்துடன் பேசுவதும், ராஜம் பேசும் விஷயங்களும் அவருக்கு சற்றும் பிடிக்கவில்லை.

ஊம்......நேரமாயிற்று. மேலே காரியம் ஆகவேண்டாமா. என்று தம் கீழ்பட்ட சிப்பந்திகளை அதிகாரம் செய்து கொண்டே அட்டகாஸம் செய்கிறார். சட்டப் படிக்கு சகல விசாரணைகளும் முடித்த பிறகு சவத்தை எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள்.

ராஜம் புழுவெனத் துடிக்கிறாள். அவளுடைய நிலைமையில் அவள் உயிரும் போய்விடுமோ என்றிருக்கிறது. தேற்றுவார் ஆற்றுவார் உண்டா! இந்த நிலைமையிலும் க்ருஷ்ணன் ராஜத்தருகில் வந்து "ராஜம்! அந்த அயோக்யனுக்குப் பரிந்து நீ இன்னும் வெட்க

மின்றி அதிகாரிகளிடம் பேசுகிருயே. இதில் மறைவிடம் என்ன விருக்கிறது. அப்பாவின் மீது இருந்த த்வேஷத்தில் இவ்விதம் செய்தது வியப்பில்லையே அவன் கொலைக்கும் அஞ்சாத பாதகனாக விருப்பதால்தான் தான் ஓர் கூலிக்காரன் என்பதையும் மறந்து உன்னைக் கெடுக்க எண்ணினன்.—

என்று முடிப்பதற்குள் "ஹா......ஈசா......ஈசா......ஐயோ! க்ருஷ்ணு! நீ யொரு மனிதனா" இச்சமயமா நீ இத்தகைய வார்த்தைகளைக் கூறுவது? ஐயோ! என்னுயிர் துடிக்கிறதே. என்னால் சகிக்க முடியவில்லையே .... அப்பாவை இழந்து அனாதைப் பறவைகள் போல நாம் இருக்கும் நிலைமையை அறவே மறந்து பேசுகிருயே. ஐயோ......என்ன செய்வேன்?" என்று கதறிக் கொண்டே போய் விட்டாள்.

உலகநாதன் இது விஷயமாக வெகு சூக்ஷ்மமான வழியொன்று கண்டுபிடித்து விட்டார். உடனே அவர் முகத்தில் சற்று தெம்பு உண்டாகியது. அதாவது தாம் ஒவ்வொரு பாங்கியிலும், மற்ற பெரிய கடைகளிலும் அன்று முதல் வரும் நோட்டுக்களில் எதிலாவது இந்த நம்பர்கள் உள்ள நோட்டுக்கள் வந்தால் அது எந்த ஆள் மூலம் கொடுக்கப்பட்டதென்று உடனே தெரிவிக்கும்படி ரகசியமாக உத்திரவு பிறப்பித்து விட்டார்.

அன்றும் எத்தனேயோ ப்ரயத்தனம் செய்து இவ்வழக்கு விஷயத்திலேயே உழைத்து வந்தார். மோஹன் மீது உலகநாதனுக்குச் சரியான சாக்ஷி இல்லாமையினால் திடீரென்று பிடிக்கவும் முடியவில்லை. ஆதலால் அவனைப் பற்றியே விசாரணை செய்து வந்தார்.

அடுத்த நாள் மாலை சாமுண்டீச்வரி பாங்கியில் கொடுத்திருந்த நம்பருள்ள ஒரு 100 ரூபாய் நோட்டு வந்திருப்பதாயும், ஓர் பெரிய டாக்டர் நாராயணனின் கணக்கில் இந்த 100 ரூபாய் நோட்டு ஒன்றும், மற்றவை செக்குகளாயும் வந்திருப்பதாக உலகநாதருக்குத் தகவல் கிடைத்தது.

உலகநாதர் இதற்குள் மோஹனைப் பற்றி விசாரித்ததில் அவன் காலணு கையில் இல்லாது தவித்ததாயும், திடீரென்று பணம்

கிடைத்துத் தாயாருக்கு வைத்தியம் செய்வதாயும் அக்கம் பக்கம் உள்ளோரிடமும், அவன் குடியிருக்கும் வீட்டினரிடமும் தெரிய வந்தன. அதே சமயம் இந்த பாங்கி விஷயமும் தெரிந்ததால் உடனே உலகநாதர் டாக்டர் வீட்டிற்குச் சென்றார்.

டாக்டர் ஏதோ ஒரு முக்கியமான பெரிய மனிதர் வீட்டில் ஆபத்தான கேஸ் விஷயமாக வெளியூர் சென்றிருப்பதாயும் விடியற் காலை வருவதாயும் செய்தி கிடைத்தது. இவ்விரண்டு ஆதாயங்களாலும் உலகநாதருக்கு மோஹன் மீதிருந்த சந்தேகம் அதிகரித்தது. மோஹன் அறியாதபடி அவனுக்கு C. I. D. காவல் வைத்திருந்தார்.

மறு தினம் காலையில் டாக்டர் வந்ததை டெலிபோனில் விசாரித்துக்கொண்டு நேரில் அவர் வீட்டிற்குச் சென்றார். போலீசார் தன்னைத் தேடி வரவேண்டிய காரியமென்னவென்று அவருக்கு சற்று ஆச்சரியம் உண்டாகியது. அதை அடக்கிக்கொண்டு "வாருங்கள். வாருங்கள். ஏது இத்தனை தூரம்? என்ன சமாச்சாரம்?" என்றார்.

18291

உலக:—உங்களிடத்தில் ஒரு முக்கியமான பெரிய சமாச்சாரம் அறியத்தான் வந்தேன். அதாவது ப்ரபல பத்திராதிபராகிய தர்மலிங்கம் ப்ரபு கொலை செய்யப்பட்ட விஷயம் தெரியுமல்லவா?

டாக்டர்:—ஆம்! ஆம்! நேற்று பத்திரிகையில் பார்த்தேன். அது மிகவும் அனியாயம். அவர் மகானுபாவர். எனக்கு அவரை நிரம்ப பரிச்சயமில்லை எனினும் அவரைப் பற்றிக் கேள்வியுண்டு... ஆமாம்...யார் கொலை செய்திருக்கலாம். ஏதாவது புலன் கிடைத்ததா! ஐயோ பாவம்! குடும்பமே அல்லகல்லோலப் பட்டுவிட்டது.

லோக:—தகவல் கிடைத்திருக்கிறது. அதை முற்றிலுமறிய உங்கள் தயவு வேண்டியிருக்கிறது. அதனால்தான் வந்தேன். அதாவது, தர்மலிங்கத்தைக் கொலை செய்ததோடு சுமார் 10000 ரூபாயும் கொள்ளை போயிருக்கிறது. அவருடைய குறிப்பு டைரியை சோதித்ததில் அவரிடமிருந்த நோட்டுக்களின் நம்பர்கள் முற்றும் குறிப்பிட்டிருந்தார். நான் அந்த நம்பருள்ள நோட்டுக்களைக் கண்டுபிடிக்க பல விடங்களில் ஏற்பாடு செய்திருந்தேன்.

Jaganmohini (Aug. 1936) Regd. No. M. 2210.



தலை

வலிக்கு

Headaches

ஆஸ்பிரினை விலக்குங்கள்

இருதயக் கோளாறுகளையும்

விலக்குங்கள்

அம்ருதாஞ்சனை

உபயோகியுங்கள்

அமிர்தாஞ்சன் டிபோ,

சென்னை கல்கத்தா பம்பாய்.